Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 120

சனிக்கிழமை
26 மார்ச் 2022

பங்குனி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

## பெற்றோல் இனி 303 ரூபா!

13

## 1 டொலர் 289 ரூபா!

கொழும்பு, மார்ச் 26
பல முக்கிய வர்த்தக வங்கிகளில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 297 வரை சென்றது.
வரலாற்றில் முதல் தடவை

15

## எரிபொருள் பற்றாக்குறை: மின்வெட்டு 10 மணிநேரம்?

கொழும்பு, மார்ச் 26
அடுத்த வாரம் முதல் மின்வெட்டு 10 மணி நேரமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று துறைசார் வட்டாரங்களில்

15

## மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்படாது

கொழும்பு, மார்ச் 26
மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருள் விநியோகத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்குவதற்கு உறுதியளித்துள்ள

15

## குழந்தையை மோதிய காரை தந்தை செலுத்தவில்லை

யாழ்., மார்ச் 26
கிளாலி எழுதுமட்டுவாழில் பின்னோக்கிச் செலுத்தப்பட்ட காரில் சிக்குண்டு ஒன்றரை வயது ஆண்குழந்தை காயமடைந்

15

# புத்தூர் நிலாவரையில் பௌத்த கட்டுமானம்?

## தொல்லியல் திணைக்களத்தின் அடாவடியால் பதற்றநிலைமை

யாழ்ப்பாணம், மார்ச் 26
புத்தூர் நிலாவரைக் கிணறு அமைந்துள்ள வளாகத்தில் தொல்லியல் திணைக்களத்தினர் நேற்று அத்துமீறி அகழ்வுப் பணிகளை முன்னெடுத்தமையால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பதற்றநிலை ஏற்பட்டது.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
வலிகாமம் கிழக்குப் பிரதேச

15

## இந்திய நிதியுதவியில் அமைக்கப்பட்ட யாழ். கலாசார நிலையம் திங்களன்று திறப்பு

### விருந்தினர்கள் தொடர்பில் இந்திய தூதரகம் மூடுமந்திரம்

யாழ்ப்பாணம், மார்ச் 26
இந்திய அரசின் நிதியுதவியில் யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு அருகில் கட்டப்பட்ட கலாசார நிலையம் நாளை மறுதினம் திங்கட்கிழமை திறந்து

15

## அரசியல் கைதிகள் விவகாரம் உள்ளிட்ட

# நான்கு விடயங்களை உடன் நிறைவேற்றுக

### பேச்சை தொடர்வதற்கு கூட்டமைப்பு ஜனாதிபதி கோத்தாபயவுக்கு நிபந்தனை

**யாழ்ப்பாணம், மார்ச் 26**
**தமிழர் தரப்பில் எரியும் பிரச்சினைகளாக உள்ள 4 விடயங்களை நிறைவேற்றி நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினால் மட்டுமே அடுத்தகட்டப் பேச்சைத் தொடரமுடியுமென ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை விதித்துள்ளது.**

15



## 'காணியைச் சுவீகரிக்கிறதா இராணுவம்? எனக்கு இதுவரை தெரியாதே!'

### ஆச்சரியமாகக் கேட்ட கோத்தா

யாழ்ப்பாணம், மார்ச் 26
வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் இன்னமும் காணிகளைச் சுவீகரிக்கின்றனர். அத்துடன் தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம் என்பனவும் தமிழ் மக்களின் காணிகளை

15

முச்சந்தி முரளி



"வெள்ளைவான் விட்டு சோலியை முடிச்சவருக்கு காணி பிடிக்கிற கதை தெரியாதெண்டது கடும் பகிடி தான் பாருங்கோ!"

# 13 இல்லையேல் தனிவழி!

## மேசையில்தட்டி சம்பந்தன் ஆவேசம்

யாழ்ப்பாணம், மார்ச் 26
'எங்களை நாய்கள் என நினைத்தீர்களா? 13 ஆவது திருத்தச் சட்டத்தைக்கூட முழுமையாக நடைமுறைப்படுத்தாவிட்டால் எங்கள் வழியில் நாங்கள் செல்வதற்கும் தயங்கமாட்டோம்' என்று ஆக்ரோஷ

15

## நாங்கள் காணிகளை அபகரிக்கவில்லையே

### கூட்டமைப்பிடம் குழைகிறார் இராணுவத்தளபதி

யாழ்ப்பாணம், மார்ச் 26
இராணுவம் காணிகளைச் சுவீகரித்தது என்று நீங்கள் ஜனாதிபதியிடம் கூறியதால் அவர் எம்மை ஏசுகின்றார். இராணுவம் எப்போது காணிகளைச் சுவீகரித்தது? என்று கூட்டமைப்பினரிடம் கேட்டுள்ளார் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதி கோத்தாபய

13

## கொக்குவிலில் ஓட்டோ எரிப்பு

### மர்மக் குழு கைவரிசை

யாழ்ப்பாணம், மார்ச் 26
கொக்குவில் பகுதியில் உள்ள வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்ட முச்சக்கர வண்டியை இனந் தெரியாத நபர்கள் நேற்று அதிகாலை தீக்கிரையாக்கியுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.
கொக்குவில்

13

## தொடர்ந்தும் பேசுவோம்

### கூட்டமைப்பிடம் கூறிய ஜனாதிபதி

யாழ்ப்பாணம், மார்ச் 26
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்தும் பேச்சு நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்றுத் தெரிவித்துள்ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கும் இடையிலான முதலாவது

13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தை சமாளிக்கவே கூட்டமைப்புடன் பேச்சு நாடகம்

## இப்படிக் கூறுகிறது சஜித் அணி

**கொழும்பு, மார்ச் 26**

**சிங்கள மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டுவரும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தமிழ்மக்களின் மனதை வெல்லவும் சர்வதேச சமூகத்தைச் சமாளிக்கவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நாடகத்தை அரங்கேற்றுகின்றார்.**

இவ்வாறு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கோத்தாபயவின் இந்த நாடகத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் துணைபோகக்கூடாது. அவர்கள் கடந்தகாலச் சம்பவங்களை நினைவில் வைத்துக்கொண்டு நிதானமாகச் செயற்பட வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக் காட்டியுள்ளது.

பேச்சு மேசையைக் கூட்டமைப்பினர் சரிவரப் பயன்படுத்தவேண்டும். அதைவிடுத்துக் கோத்தாபய அரசாங்கத்தைக் காப்பாற்றும் வகையில் அவர்கள் செயற்படக் கூடாதுஎனவும்சஜித்அணி வலியுறுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டும் என்பதில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாகவுள்ளது.

ஆனால், தமிழர்களுக்குத் தீர்வை வழங்க இந்தக் கோத்தாபய அரசாங்கம் ஒருபோதும் முன்வர மாட்டாது எனவும் ஐக்கிய மக்கள் சக்தி மேலும் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார். (ஒ-22)

## மேலும் ஒரு தொகுதி டீசலை இலங்கைக்கு வழங்கும் இந்தியா

கொழும்பு, மார்ச் 26

இலங்கைக்கு மேலதிகமாக ஒரு தொகை டீசலை வழங்குவதற்கு இந்தியா இணங்கி இருப்பதாக ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் கோரிக்கைக்கு அமைய இந்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் இலங்கைக்கு எரிபொருள் இறக்குமதி செய்வதற்காக 500 மில்லியன் டொலர் பெறுமதியான கடன் எல்லை வசதிக்கான உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கைக்கு 7 மாதங்களுக்கு பெற்றோல், டீசல் மற்றும் விமான எண்ணெய் வழங்கப்படும்.

இதற்கு மேலதிகமாக அவசர தேவைக்காக 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை வழங்குமாறு இலங்கை விடுத்த கோரிக்கையை இந்தியா ஏற்றுக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தொகை டீசலை விரைவில் இலங்கைக்கு அனுப்பிவைக்க இந்திய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதாக, இந்திய அரசின் முக்கிய புள்ளி ஒருவரை மேற்கோள்காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (ஒ-இ)

## விலையுயர்வை கண்டித்து யாழில் இன்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 26

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து, யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக இன்று முற்பகல் 10 மணிக்கு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும் என்று கட்சியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொருள்களின் விலை உயர்ந்துள்ளது. மக்கள் ஒருவேளைக் கஞ்சிக்குக் கூடக் கையேந்தும் நிலைமையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். அகதிகளாகத் தமிழகத்துக்கும் செல்லத் தொடங்கியுள்ளனர்.

இந்த அரசாங்கத்தின் பொருளாதாரச் சீர்கேடுகளுக்குஎதிராகவும், விலை உயர்வுக்கு எதிராகவும், பொருளாதாரத்தைச் சீரழித்தமைக்கு எதிராகவும் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம்.

இதற்கு மக்கள் அனைவரும் ஆதரவு தரவேண்டும்-என்றுள்ளது. (ஒ-4-110)

## சிங்கள – பௌத்த வாக்குகளால் வென்றாலும் தமிழர்களை கைவிடோம்

### கூறுகிறார் பீரிஸ்

கொழும்பு, மார்ச் 26

'சிங்கள - பௌத்த மக்களின் அமோக வாக்குகளால் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும் அவர் தமிழ் மக்களைக் கைவிடமாட்டார்.

தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாகவுள்ளார்.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் திறந்த மனதுடன் பேச்சை நடத்தவேண்டும்.

சந்தேகப் பார்வையில் அவர்கள் செயற்படக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினருடன் ஆக்கபூர்வமான பேச்சை நடத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதி தீர்த்து வைப்பார் எனவும் அவர் உறுதியளித்தார். (ஒ-22)



## நாட்டை வந்தடைந்த கப்பலுக்கு 42 மில்லியன் அமெரிக்க டொலர்

கொழும்பு, மார்ச் 26

கடந்த 12 நாள்களாக கொழும்பு துறைமுகத்தில் காணப்பட்ட டீசல் மற்றும் விமான எரிபொருள்களுடன் வருகைதந்த கப்பலுக்கு 42 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டுள்ளதாக வலு சக்தி அமைச்சின் செயலாளர் கே.டி.ஆர் ஒல்கா தெரிவித்துள்ளார்.

இதன்படி 20 ஆயிரம் மெற்றிக்தொன் டீசல் மற்றும் 20 ஆயிரம் மெற்றிக்தொன் விமான எரிபொருளை இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எனினும், கப்பலுக்கான தாமதக் கட்டணம் இதுவரை கணக்கிடப்படவில்லை.

மேலும், இந்தியக் கடனுதவியுடன் 35 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருளைத் தாங்கிய மற்றுமொரு கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-14)


## பைஸர் தடுப்பூசிகள் ஜூலையுடன் காலாவதி

கொழும்பு,மார்ச் 26

களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பைஸர் தடுப்பூசிகள் ஜூலை மாதத்தின் இறுதியுடன் காலாவதியாகிவிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 80 வீதமானோருக்கு தடுப்பூசியேற்ற இலக்கு வைக்கப்பட்டுள்ளது. அந்த இலக்கு எட்டப்படாவிட்டால் தடுப்பூசியை எரியூட்டி அழிக்கநேரிடும். மக்கள் தவறான தகவல்களைப் பரப்பாமல் உடனடியாகத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தற்போது 55 வீதமானோர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். இந்த எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று கொழும்பைச் சேர்ந்த தொற்றுத் தடுப்புக் கூட்டிணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார். (ஒ-4-ரி1)

## 14 மருந்துகள் இறக்குமதிக்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு



கொழும்பு,மார்ச் 26

நாட்டில் மருந்துகளுக்கு நிலவும் திடீர் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக, 14 மிக முக்கியமான மருந்துப் பொருள்களை அவசரமாக இறக்குமதி செய்வதற்கு, 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த விடயத்தில் நிதியமைச்சரின் நிதிச் செயலாளர் ஆட்டிகலவுடன் இணைந்து ஒரு கணிப்பீட்டைச் செய்துள்ளோம். அடுத்த ஆறு மாதங்களுக்கான திட்டத்தில் இதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஏனைய மருந்துகள் இறக்குமதியும் இடம்பெறவுள்ளதால், தட்டுப்பாடு எதுவும் ஏற்பட மாட்டாது. அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக மருந்துகள் இறக்குமதியில் தாமதங்கள் ஏற்பட்டதை ஏற்றுக் கொள்கின்றோம்-என்றார். (ஒ-4-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகளில் சேமிக்கப்படும் எரிபொருள்களால் ஆபத்து

**கொழும்பு, மார்ச் 26**

**நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை அடுத்து, பலர் வீடுகளில் எரிபொருள்களைச் சேமித்து வைப்பதால், தீ விபத்துக்கள் அதிகரித்துள்ளன என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்**

இதுதொடர்பில் கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை விசேட மருத்துவ நிபுணர் கயான் முனசிங்க தெரிவிக்கையில்,

எரிபொருள்களால் ஏற்படுகின்ற தீச் சம்பவங்கள் காரணமாக, கொழும்பு தேசிய மருத்துவமனையில் இரண்டு நாள்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் உயிரிழக்கின்றனர். நாளாந்தம் 4 முதல் 6 வரையான விபத்துக்கள் பதிவாகியுள்ளன. எனவே வீடுகளில் எரிபொருள்களை சேமித்து வைப்பது மிகவும் ஆபத்தானது- என்றார். (ஒ-4-இ)


## உலக வங்கியிடமிருந்தும் 1 பில்லியன் டொலர் கடன்

கொழும்பு,மார்ச் 26

உலக வங்கியிடம் இருந்து ஒரு பில்லியன் டொலர் கடன் உதவியை இலங்கை பெற்றுக் கொள்ளும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் கிராமப்புற அபிவிருத்தி, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்களுக்காக இந்தக் கடன் உதவி கோரப்படும் என்றும் தெரியவருகிறது.

அதேவேளை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச அடுத்த மாதம் அமெரிக்காவில் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஒ-4-இ)



## ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானம்; வாக்கெடுப்பில் இலங்கை நழுவல்

கொழும்பு,மார்ச் 26

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போரை உடனடியாக நிறுத்தவேண்டும் என்ற கட்டுப்பாடற்ற தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 140 நாடுகளும், ரஷ்யாவுடன் இணைந்து பெலாரஸ், சிரியா, வடகொரியா மற்றும் எரித்திரியா முதலான 5 நாடுகள் எதிராகவும் வாக்களித்துள்ளன.

இலங்கை, இந்தியா, சீனா உள்ளிட்ட 38 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ஒ-4-இ)

## 1,60,000 ரூபாவாக எகிறியது தங்கம்



கொழும்பு,மார்ச் 26

நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இலங்கை ரூபாவுக்கு நிகராக அமெரிக்க டொலரின் பெறுமதி தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால், தங்கத்தின் விலையிலும் தாக்கம் செலுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய நிலைவரப்படி, 22 கரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 53 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

கடந்த ஒரு வாரமாக ஒரு பவுண் ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 500 ரூபாவாகக் காணப்பட்டது. 24 கரட் தூய தங்கம் ஒரு பவுண் ஒரு லட்சத்து 67 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

ஒரு வாரமாக 24 கரட் தூய தங்கத்தின் விலை ஒரு பவுண் ஒரு லட்சத்து 61 ஆயிரம் ரூபாவாகக் காணப்பட்டது. (ஒ-4-இ)


## கெரவலப்பிட்டி மின்நிலைய பணிகள் இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 26

கெரவலப்பிட்டி மின்உற்பத்தி நிலையத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே குறித்த மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்தநிலையில், கடந்த சில தினங்களுக்கு முன் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் தேவையான மசகு எண்ணெய் இன்மையால் மூடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-14)

## ருமேனிய எல்லையில் 16 இலங்கையர் மீட்பு



கொழும்பு,மார்ச் 26

ருமேனிய எல்லையில் ட்ரக் வண்டிக்குள் இருந்து 16 இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

எல்லையில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட தீவிர சோதனை நடவடிக்கையின்போது, 38 குடியேறிகள் மீட்கப்பட்டனர். அவர்களில் 16 பேர் இலங்கையர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ருமேனியர்களால் இயக்கப்படும் செமி டிரெய்லர் டிரக் மற்றும் இரண்டு மினி பஸ்களில் சட்டவிரோதமாக மறைந்திருந்த நிலையில் இவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஒ-4-இ)




கிட்டடியில, சண்டிலிப்பாயில திறந்துவைச்ச கலாசார மத்திய நிலையத்தில பிக்குவுக்கு முன்னுரிமை குடுத்து, மற்ற மதகுருமாரை அவமதிச்ச விசயத்தைப் பட்சி சொன்னதெல்லோ. அதில இன்னும் சில விசயங்கள் இருக்கெண்டு தகவல் வர, இன்னும் ஆழமா அதைப் பட்சி கிளற வெளிக்கிடேக்கதான் ஒரு உண்மை தெரிய வந்திச்சு. அண்டைக்கு சண்டிலிப்பாயிலையும், மருதங்கேணியிலயும் இந்தக் கலாசார மத்திய நிலையங்களை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க திறந்துவைச்சவர். ஆனால் பகிடி என்னெண்டால், ஏற்கனவே ஒரு தாலி கழுத்தில தொங்கிக் கொண்டிருக்கிற பெண்ணுக்கு இன்னொரு தாலியைக் கட்டின வேலைதான் அண்டைக்கு நடந்திருக்கு.

அது என்னெண்டால், 2019 ஆம் ஆண்டே, நல்லாட்சி அரசாங்கத்தின்ர காலத்திலேயே இந்தக் கலாசார மத்திய நிலையங்களைக் கட்டி முடிச்சாச்சு. அதோட நிக்காமல் திறப்புவிழாவும் இந்த ரண்டு கலாசார நிலையங்களுக்கும் அப்பவே செய்திட்டினம். அதிலையும் மருதங்கேணி கலாசார நிலையத்தில, திறப்புவிழா நடந்து அதுக்குப் பிறகு கலாசார விழா கூட அந்த மண்டபத்தில கலக்கலா நடந்திருக்கு. இப்பிடியெல்லாம் ஏற்கனவே திறந்து வைச்சு, இயங்கிக் கொண்டிருந்த கலாசார நிலையங்களைத்தான் திரும்ப ஒருக்கா, ரிப்பன் வெட்டி திறந்து வைச்சிருக்கினம். இப்பிடி கண்ணுக்கு முன்னால பச்சையா எங்களைப் பேய்க்காட்டுகினம் எண்டு தெரிஞ்சும், எங்கட அதிகாரியளும் அதை ஒரு முக்கியமான நிகழ்வா கொண்டாடி, விசுவாசத்தைக் காட்டி இருக்கினம். சிலவேளை இந்த அரசாங்கம் கவிண்டு, இன்னொரு அரசாங்கம் வந்தால் மூண்டாவது முறையா இதே மண்டபங்களுக்கு இன்னொருக்கா திறப்பு விழா நடந்தாலும் ஆச்சரியமில்லை.

இப்பிடி ஒரே கட்டடத்துக்கு ரண்டு, மூண்டு திறப்புவிழாச் செய்யிறதுக்கு காரணம், 'அவை ஒண்டும் செய்யேலை. நாங்கள் தான் எல்லாம் செய்யிறம்' எண்டு சனத்துக்கு படம் காட்டுறதுக்கும், கல்வெட்டில தங்கட பேரைப் போடுறதுக்கும்தான். சரி அமைச்சரைத்தான் விடுங்கோ. இஞ்ச இருக்கிற வாலுகள் ஏற்பாடு செய்த திறப்புவிழா நடந்த கட்டடத்துக்கு இன்னொருக்கா ரிப்பன் வெட்டிட்டார் எண்டு மன்னிக்கலாம். ஆனால் பிரதமரே இப்பிடியான வேலையளைச் செய்தால் என்ன செய்யலாமெண்டு சொல்லுங்கோ.

போனகிழமை யாழ்ப்பாணம் வந்த மஹிந்தர், மட்டுவிலில பொருளாதார மத்திய நிலையத்தை திறந்துவைச்சது தெரியும்தானே. நீங்கள் நினைக்கிற மாதிரி அதை ரண்டாந்தரம் திறந்து வைக்கேலை. இப்பதான் அது முதல்முறையா திறபட்டது. ஆனால் அதுக்கு நிதி ஒதுக்கீடு செய்ததும், கட்டுவிச்சதும் நல்லாட்சிக்காரர்தான். அலுங்காமல் குலுங்காமல் வந்து ரிப்பனை வெட்டி திறந்தது மட்டும்தான் மஹிந்தர் செய்த ஒரேயொரு வேலை. அப்பிடி ரிப்பனை மட்டும் வெட்டினவர் 'நாங்கள் மட்டுமே அபிவிருத்திகளைச் செய்கிறோம். நல்லாட்சிக்காரர் உங்களுக்கு எதுவுமே செய்யவில்லையே' என்று துடிக்காமல் பதைக்காமல் அடிச்சுவிட்டுட்டு போட்டார்.

பிரதமரே இப்பிடி முழுப்பூசணிக்காயை சோத்தில மறைக்கேக்க, அமைச்சர் மறைக்கிறது பிழையில்லைத்தானே?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 13 வன்முறைச் சம்பவங்கள் பதிவு

## மாவட்டச் செயலர் தகவல்



**யாழ்ப்பாணம்,மார்ச் 26**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வருடம் பெண்க ளுக்கு எதிரான 13 வன்முறைச் சம்ப வங்கள் தொடர்பில் மாவட்ட பெண்கள் அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித் தார்.**

யாழ். மத்திய பேருந்து நிலையத் தில், பொதுப்போக்குவரத்துப் பேருந்துகளில் பெண்களுக்கு இடம்பெறும் வன்முறைச் சம்பவங் களை இல்லாதொழிப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. இதன்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; பெண்களுக்கு எதிரான வன் முறைச் சம்பவங்களை இல்லா தொழிப்பதற்கு அனைவரின் ஒத் துழைப்பும் மிக அவசியம். குறிப் பாக பெண்கள், இளைஞர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் இந்த விடயத்தில் மிகவும் ஒத்துழைப் போடு செயற்படுவதன் மூலமே, பெண்களுக்கு எதிரான வன் முறைச் சம்பவங்களை இல்லா தொழிக்க முடியும். சில வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறும்போது, அதனை வெளிக்கொணராத நிலையும் காணப்படுகின்றது. எனவே அனைத்து வன்முறைச் சம்பவங் களையும் இல்லாதொழிப்பதற் காக, நாம் அனைவரும் ஒன்றி ணைந்து செயற்படவேண்டும் - என்றார். (ஒ-4,27)

# யாழ்ப்பாணம் மாநகரசபை அமர்வையும் பாதித்த மின்தடை

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்த அமர்வு நேற்று இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது மின் தடையேற்பட்டது. இதனால் அமர்வு சுமார் 50 நிமிட நேரம் பாதிக்கப்பட்டது.

நேற்றுக்காலை சபை அமர்வு ஆரம்பமாகிய போதே மின்சாரம் நிறுத்தப்பட்டிருந்தது. இதனால் சபையின் மின்பிறப்பாக்கி இயக்கப்பட்டு அதன் ஊடாக மின்சாரம் வழங்கப்பட்டது. முற்பகல் 11.50 மணியளவில் மின்பிறப்பாக்கியின் டீசலும் தீர்ந் துள்ளது. இதனால் 11.50 இலிருந்து 12.40 வரை யில் சபை அமர்வு ஸ்தம்பிதம் அடைந்தது. (ஒ-5)

### யாழ். மாநகர மேயரின்

# சொந்த வாகனத்துக்கு எரிபொருள் வழங்க மறுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாண மாநகர மேயரின் சொந்த வாகனத்துக்கு சபை நிதியிலிருந்து எரிபொருள் வழங்குவதற்கு மா நகரசபை உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ள னர்.

மாநகரசபையின் மேயராகப் பொறுப்பேற்றபோது, சபையின் வாகனம், எரிபொருள் உட்பட சபையின் எந்தவொரு சலுகைகளும் தனக்குத் தேவையில்லை என்று மேயர் வி.மணிவண்ணன் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் தனது சொந்த வாகனத்துக்கு சபை யின் நிதியிலிருந்து எரிபொருளை பெற்றுக்கொள் ளும் யோசனையை மேயர் முன்வைத்திருந்தார். சபை அந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளது. உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து, மேயரின் சொந்த வாகனத்துக்கு சபையின் நிதியிலிருந்து எரிபொருளை பெற்றுக் கொள்வதில் சட்டச்சிக்கல்கள் இல்லை என் றால் மாத்திரமே அனுமதியை வழங்க முடியும் என்று சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த இரண்டு மாதங்களாக மேயரின் சொந்த வாகனம் பழுதடைந்திருப்பதாகத் தெரிவித்து, சபை வாகனத்தையே பயன்படுத்தி வருகின்றார் என் பது குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

# வியாபார வங்கி சேவை முகாம்

மன்னார், மார்ச் 26

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச் சின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரி வால் 'வியாபார வங்கி சேவை' முகாம் நேற்று மன்னார் மாவட்டச் செயலக ஜெய்கா மண்டபத் தில் நடைபெற்றது.

இதன்போது தொழில் முயற்சியாளர்களுக்கான வங்கி இணைப்பாக்கம் செய்யப்பட்டதோடு அவர்களுக்கான நிதிசார் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பும் உருவாக்கிக் கொடுக் கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,213)





# மாணவர்கள் கௌரவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 26

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது சித்தியடைந்த மாணவர்கள் கல்லூரி சமூகத்தால் கௌர விக்கப்பட்டனர்.

கல்லூரி அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சோ.திருக்குமரனும் சிறப்பு விருந்தினராக கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் கலந்துகொண்டனர். (ஒ-14,9)

# 2மாதங்களுக்குள் 3ஆவது வெளிநாட்டுப் பயணம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணம் மாநகரசபை மேயர் வி.மணிவண் ணன் இரண்டு மாதங்களுக்குள் 3 ஆவது வெளி நாட்டுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

மாநகர மேயர் தனது தனிப்பட்ட பயணமாக கடந்த இரண்டு தடவைகளும் வெளிநாட்டுக்குச் சென்றிருந் தார். இப்போது மூன்றாவது தடவையாக பிரிட்டனுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். மாநகர மேயரின் பிரிட்டன் பயணத்தின்போது அவரது அணியைச் சேர்ந்த மாநகரசபை உறுப்பினர் ஒருவரும் பயண மாகவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-5)

# கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மண்ணெண்ணெய் விநியோகம்

சாவகச்சேரி, மார்ச்.26

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் கடைகளில் பங்கீட்டு அட்டைக்கு மண் ணெண்ணெய் நேற்றுமுன்தினம் வழங்கப் பட்டது.

கிளைக் கடைகளிலும் எரிபொருள் நிலையத்தி லும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மண்ணெண் ணெய் விநியோகம் நடைபெறும் என்று அறி வித்தல் பலகைகளில் அறிவிக்கப்பட்டதைய டுத்து மக்கள் தமது பிரிவிலுள்ள கிளைக் கடைகளில் மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் கிளைக் கடைகள் இல்லாத பகுதி மக் கள்கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர் எரிபொருள் நிலையத்தில் மண்ணெண்ணெ யைப் பெற்றுக்கொண்டனர். இதேவேளை பளை நகரப் பகுதியில் உள்ள எரிபொருள் நிலையத் தில் பங்கீட்டு அட்டைக்கு தலா 5 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. (ஒ-14,9)



# பாடசாலைக்குள் புகுந்து ஆசிரியர் மீது தாக்குதல்

வவுனியா, மார்ச் 26

வவுனியா, செட்டிக்குளம் வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலயத்தில் புகுந்து ஆசிரியர் மீது மூன்று நபர்கள் நேற்றுத் தாக்குதலை மேற்கொண்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். பாடசாலை ஆரம்பமாகி நடைபெற் றுக்கொண்டிருந்த வேளை காலை 8.40 மணிக்கு பாடசாலைக்குள் சென்ற மூன்று நபர்கள் பாடசாலை வளாகத்தில் நின்ற ஆசிரியர் மீது கட்டையால் தாக்கினர். வளாகத்தில் நின்ற மற்றைய ஆசிரியர் இதனை அவதானித்தபோது குறித்த நபர்கள் அங்கிருந்து தப்பித்துச் சென்றுள் ளனர். தாக்குதலில் தலையில் படுகாயங்க ளுக்குள்ளாகிய நிலையில் காணப் பட்ட ஆசிரியர் செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த செட்டிக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றனர். (ஒ-14,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கிக்கு நெருக்கடியில்லை

## வதந்திகளை நம்பாதீர் என்கிறார் அதன் தலைவர்



**கொழும்பு,மார்ச் 26**

**மக்கள் வங்கி திவாலாகியுள்ளது என்று சமூக வலைத்தளங்களில் பரவி வரும் வதந்திகளை நம்பவேண்டாம் என்று அதன் தலைவர் சுஜீவ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

குற்றச்சாட்டுகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை.

மக்கள் வங்கி நெருக்கடியில் உள்ளது என்பது அப்பட்டமான பொய். இந்த நாள்களில் நாட்டில் டொலர் தட்டுப்பாட்டுடன் இரண்டு அல்லது மூன்று கடன் கடிதங்கள் சிக்கித் தவித்தன. ஆனால் இன்று தேவையான டொலர் மத்திய வங்கியால் வழங்கப்படுகின்றது.

அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. இங்கு வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை. இவை முற்றிலும் பொய்யான பிரசாரம். மக்களைத் தவறாக வழிநடத்தும் வகையில் இவ்வாறான போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4,இ)

# திவாலாகும் நிலையில் அரச வங்கிகள் இல்லை

## மத்திய வங்கி தெளிவுபடுத்தியது

கொழும்பு.மார்ச் 26

அரச வங்கிகள் மிகவும் சுமுகமான முறையில் இயங்கி வருகின்றன. சகல வங்கிக்கட்டமைப்புகளும் ஸ்திரமான நிலையில் உள்ளன என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

டொலருக்கான பற்றாக்குறை, பொருள்களின் விலையேற்றம், அத்தியாவசியப்பொருள்களுக்கான தட்டுப்பாடு உள்ளடங்கலாக அண்மைய காலங்களில் நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் நாட்டின் வங்கிச் செயற்பாடுகள் முழுமையாகப் பாதிப்படையக்கூடும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை நாடாளுமன்றில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, அரச வங்கியொன்று வங்குரோத்து நிலையை அடைந்திருப்பது தொடர்பில் உடனடியாக அவதானம் செலுத்தவேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் வங்கிக்கட்டமைப்புத் தொடர்பில் தெளிவுபடுத்தி, இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நாட்டின் வங்கிக்கட்டமைப்பு வலுவான நிலையில் இருப்பதுடன், அரச வங்கிகளின் செயற்பாடுகள் மிகவும் சுமுகமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனைப் பொதுமக்களுக்கும், தொடர்புடைய ஏனைய தரப்பினருக்கும் உறுதிப்படுத்துகின்றோம் - என்றுள்ளது. (ஒ-4.இ)



## ரஷ்ய தம்பதியரின் பணப்பை திருட்டு

### சந்தேகநபர் கைது

களுத்துறையில் ரஷ்யத் தம்பதியரின் பெருந்தொகையான வெளிநாட்டுப் பணத்துடனான பையைத் திருடிச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைக்குட்டையால் பாதி இலக்கத் தகடு மூடப்பட்ட மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்தேகநபர், ரஷ்யத் தம்பதியினரைப் பின்தொடர்ந்து சென்று திருட்டில் ஈடுபட்டுள்ளார்.

தம்பதியரின் கடவுச்சீட்டுகள் மற்றும் அமெரிக்க டொலர் உட்பட பல வெளிநாட்டு நாணயங்கள் அடங்கிய பை சந்தேகநபரால் திருடப்பட்டுள்ளது.

ரஷ்ய தம்பதியால் களுத்துறை தெற்கு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆயிரத்து 335 யூரோ, ஆயிரத்து 650 அமெரிக்க டொலர் அடங்கிய பை சந்தேகநபர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் இருக்கைக்கு அடியில் மீட்கப்பட்டது. சந்தேகநபர் போதைப்பொருளுக்கு அடிமையாகியிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. அவரிடம் போதைப்பொருள் சிலவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (ஒ-4-இ)

# நாட்டில் வங்கிக் கட்டமைப்பு உறுதிப்பாடாகவே உள்ளது

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு,மார்ச் 26

அரச வங்கிக் கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளது என்று எதிர்த்தரப்பினர் குறிப்பிடும் கருத்து முற்றிலும் அடிப்படையற்றது. சகல அரச வங்கிகளும் ஸ்திரத் தன்மையில் உள்ளதை மத்திய வங்கி உறுதிப்படுத்தியுள்ளது - என்று நுண்கடன் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டவரைவு மீதான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக குறிப்பிடப்படும் விடயங்கள் சமூகக் கட்டமைப்பில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை எதிர்க்கட்சியினர் விளங்கிக் கொள்ளவேண்டும்.

நாட்டின் பொருளாதார நிலைமை மோசமடைந்துள்ளது என எதிர்த்தரப்பினர் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்துள்ளனர். வெளிநாட்டுக் கையிருப்பு வரையறுக்கப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கிறோம். நெருக்கடிகளை முகாமைத்துவம் செய்ய அரசு முறையான திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளது.

கொரோனாத் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் பொருளாதாரப் பாதிப்பு இரட்டிப்படைந்துள்ளது. எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைக்கு இன்னும் ஓரிரு நாள்களில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

எரிபொருள் இறக்குமதிக்காக இந்தியா 500 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது. எதிர்வரும் காலங்களில் அத்தொகையை 750 மில்லியன் டொலராகப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம். மறுபுறம் அத்தியாவசியப் பொருள் இறக்குமதிக்காக இந்தியாவிடமிருந்து 1 பில்லியன் டொலர் நிதியுதவி கிடைக்கப் பெற்றுள்ளது. சமூக கட்டமைப்பில் தற்போது தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு புத்தாண்டு காலப் பகுதிக்குள் தீர்வு பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (ஒ-4,இ)



# ஸ்ரான்லி வீதியின் பாலம் புனரமைப்பு நிறைவு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்.ஸ்ரான்லி வீதியின் அகலிப்புப் பணிகளுக்காக கடந்த மாதம் வீதியின் பாலம் உடைக்கப்பட்டு அதன் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் குறித்த வீதியின் பணிகள் நிறைவடைந்துள்ளன.

ஸ்ரான்லி வீதியின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட வேளை குறித்த வீதிக்கும் இராசாவின்தோட்ட வீதிக்குமிடையிலான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

பாலத்துக்கான புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்த நிலையில் குறித்த வீதியில் போக்குவரத்துப் பயன்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே மாற்று வழிகளைப் பயன்படுத்தி பயணித்த பொதுமக்கள் இந்த வீதியை மீளவும் பயன்படுத்தமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ - 14,125)

# போலியான ஆவணங்களைத் தயாரித்து அரச முதலீட்டு வங்கியில் 47 பேர் கடன்

## கோப் குழு தகவல்

கொழும்பு,மார்ச் 26

போலியான ஆவணங்களைத் தயாரித்தும், போலியான தகவல்களை முன்வைத்தும், அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் 47 பேர் 68 மில்லியன் ரூபா கடன்களைப் பெற்றுள்ளனர் என்று அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு தெரிவித்துள் ளது.

கடன் பெற்றவர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருப்பதுடன், இது தொடர்பில் இன்னமும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் குழுவுக்குச் சமுகமளித்திருந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனுடன் தொடர்புபட்ட வெளிநபர்கள் இருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். புதிய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டபின்னர், குறித்த கடனை மீள வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு கோப் குழுவின் தலைவர், அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.




அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் 2017 மற்றும் 2018 ஆம் நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராயும் நோக்கில் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு கூடிய போதே இந்த விடயங்கள் வெளிக்கொணரப்பட்டன.

அத்துடன் வீட்டுக் கடன்கள் அதிகம் வழங்கப்பட்டமை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. கைத்தொழில் மற்றும் விவசாயத்துக்கு வழங்கப்படும் கடன்கள் அதிகரிக்கப்படவேண்டும் என்று குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்தனர். (ஒ-4,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி

## 21.3.2022 முதல் 8.10.2023 வரை



**ராகு-கேது பெயர்ச்சி, வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 21ஆம் திகதி பிற்பகல் 3.02 மணிக்கு பெயர்ச்சியானார். இதில் ராகு ரிஷபத்தில் இருக்கும் கார்த்திகை 2ஆம் பாதத்திலிருந்து மேடராசியில் இருக்கும் கார்த்திகை 1ஆம் பாதத்துக்கும், கேது விருச்சிகத்தில் இருக்கும் விசாகம் 4ஆம் பாதத்திலிருந்து. ஜென்ம ராசியான துலாம்ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்துக்கும் பெயர்ச்சியாக உள்ளார். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி பிற்பகல் 1.38 மணியளவில் ராகு - கேது பெயர்ச்சி நிகழ்கிறது.**

வாழ்வில் உச்சத்தை எட்டிய பிறகும் பழைய நிலைமையை மறக்காத குணம் கொண்ட துலாம் ராசியினரே.... நம்பி வந்தவர்களைக் கைவிடாமல் நேசக்கரம் நீட்டுபவர். கடலளவு அன்புகொண்ட நீங்கள், கொடுத்த வாக்கைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள். உங்களுக்கு 21.03.2022 முதல் 08.10.2023 வரையிலும் ராகுவும், கேதுவும் என்னென்ன பலன்களைத் தரப் போகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

இதுவரை உங்கள் ராசிக்கு எட்டாம் வீட்டில் அமர்ந்து உங்களைப் படாதபாடுபடுத்திய ராகு பகவான் இப்போது ராசிக்கு ஏழாம் வீட்டில் வந்து அமர்கிறார். ஆகவே பிரச்சினைகள் நீங்கும். உங்களிடம் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வர ராகு அருள்புரிவார். வீண்விவாதங்கள், மனஉளைச்சல், பதற்றம், காரியத் தடைகள் அனைத்தும் நீங்கும். உற்சாகத்துடன் வலம் வருவீர்கள்.

குடும்பத்தினருடன் விட்டுக்கொடுத்துப் போவீர்கள். கணவன்- மனைவிக்குள் சந்தோஷம் நிலைக்கும். எனினும் அவ்வப்போது வாழ்க்கைத் துணைவருடன் சிற்சில விவாதங்கள் வரவே செய்யும். பெரிதுபடுத்தாதீர்கள். வாழ்க்கைத் துணைவர் தரும் அறிவுரைகளை மனமுவந்து ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்வழி உறவினர்களால் கருத்துமோதல், பகைமை வந்துபோகும். எந்த விஷயமாக இருந்தாலும் மற்றவர்களின் ஆலோசனையின்றி சுயமாகச் சிந்தித்து முடிவெடுங்கள். விரைவில் குழந்தைப் பாக்கியம் உண்டாகும். குலதெய்வத்துக்குச் செய்யவேண்டிய நேர்த்திக்கடனைச் சிறப்பாக முடிப்பீர்கள்.

**21.03.2022 முதல் 22.05.2022 வரை:** சூரியனின் கார்த்திகை நட்சத்திரம் 1ம் பாதத்தில் ராகு செல்வதால் திடீர் செலவுகள், பூர்வீகச் சொத்துச் சிக்கல்கள் வந்துபோகும். எவரையும் நம்பி முக்கிய முடிவுகள் எடுக்காதீர்கள்.

**23.05.2022 முதல் 29.01.2023 வரை:** சுக்ரனின் பரணி நட்சத்திரத்தில் ராகு செல்வதால் பண வரவு திருப்திகரமாக இருக்கும். வீட்டில் தடைப்பட்டுக் கொண்டிருந்த சுபகாரியங்கள் கூடிவரும்.

**30.01.2023 முதல் 08.10.2023 வரை:** கேதுவின் அஸ்வினி நட்சத்திரத்தில் ராகு செல்வதால் காரியத் தடைகள், வேலைச்சுமைகள் அதிகரிக்கும். விரக்தி, சோம்பல், மன உளைச்சல் வந்து போகும்.




**வியாபாரத்தில்:** போட்டியாளர்களைச் சமாளிக்க அவர்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் உங்கள் அணுகுமுறையை மாற்றுவீர்கள். புதிய முதலீடுகளைப் பற்றி யோசிப்பீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள்.

**உத்தியோகத்தில்:** உங்களைக் குறை சொல்லிக் கொண்டிருந்த உயரதிகாரி இனி நேசக்கரம் நீட்டுவார். பதவி உயர்வு உண்டு. கலைத்துறையினர் போட்டி, பொறாமைகளுக்கு நடுவில் வெற்றி பெறுவார்கள். உங்களின் படைப்புகளை அரசு கௌரவிக்கும். இதுவரை உங்கள் ராசிக்கு இரண்டாமிடத்தில் நின்று கொண்டு உங்களை பக்குவமில்லாமல் பேசவைத்து, பல பிரச்சினைகளில் சிக்கவைத்த கேது, இப்போது உங்கள் ராசிக்குள்ளேயே வந்து அமர்வதால், சூழலுக்கு ஏற்ப பேசவைப்பார். எப்போதும் ஒருவித தடுமாற்றத்திலேயே இருந்த நீங்கள் இனி தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

குடும்பத்தினருக்கும் உங்களுக்கும் ஒரு பெரிய இடைவெளி இருந்ததே, இனி அவர்களுக்காக அதிக நேரம் ஒதுக்கி அவர்களின் இன்ப,துன்பங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். பிள்ளைகளின் வருங்காலத்தைப் பற்றிய கவலைகள் அவ்வப்போது வந்து போகும். மகளுக்காக வரன் தேடி அலைவீர்கள். ராசிக்குள் கேது அமர்வதால் தலைச்சுற்றல், ஒற்றைத் தலைவலி, காய்ச்சல், தூக்கமின்மை, எதிலும் ஒருவித சலிப்பு, முன்கோபம் வந்து நீங்கும். வருமானம் அதிகரித்தாலும் சேமிக்க முடியாமல் கையிருப்புக் கரையும்.

சகோதரர்களிடம் வீண்விவாதங்கள் வேண்டாம். கொஞ்சம் விட்டுக்கொடுத்துப் போகவும். திடீர்ப் பயணங்களுக்குக் குறையி ருக்காது. நண்பர்களுடன் வீண் வாக்குவாதங்களைத் தவிருங்கள். வாகனத்தைக் கவனமாக இயக்குங்கள்.

**21.03.2022 முதல் 24.09.2022 வரை:** குருவின் விசாகம் நட்சத்திரத்தில் கேது செல்வதால் எதிர்பார்த்த இடத்தில் பண உதவி கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. சொத்து வாங்குவீர்கள்.

**25.09.2022 முதல் 04.06.2023 வரை:** ராகுவின் சுவாதி நட்சத்திரத்தில் கேது செல்வதால் தந்தையின் உடல்நிலை பாதிக்கும்.

**04.06.2023 முதல் 08.10.2023 வரை:** செவ்வாயின் சித்திரை நட்சத்திரத்தில் கேது செல்வதால் மனைவி மற்றும் சகோதர வகையில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது.

## குறைகள் காணுவதைவிட்டு நிறைகளைப் பாராட்டுவோம்

தவக்காலச் சிந்தனை

சிறந்த ஓவியம் ஒன்றை வரைந்த ஒருவர் அதை மேலும் மெருகேற்ற கருத்துக் கணிப்பு நடத்தினார். குறைகளை அவர்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டிக்கொண்டு போனார்கள். ஓவியத்தில் நீங்களே மாற்றம் செய்யலாம் என்று தெரிவித்த ஓவியர் தூரிகையை அவர்களிடம் கொடுத்தார். யாருமே சரிசெய்ய முன்வரவில்லை. இன்றைய உலகப்போக்கின் பிரதிபலிப்புகளில் இதுவும் ஒன்று.

நன்மைத்தனங்கள் அரங்கேறும்போது பாராட்டாது, குறைகளை மட்டும் பெரிதுபடுத்தி தூற்றி மகிழ்பவர்கள் பலர் உள்ளனர். தனக்கென்றால் ஒரு நியாயம் ஊரார்க்கு வேறுதீர்ப்பு என்பது பலரின் அன்றாட வாழ்க்கை முறையாகிவிட்டது. இந்த மனநிலைதான் பல முரண்பாடுகளைப் பதியவிட்டு தன்னில் நிறைவையும் பிறரில் குறைகளையும் காணவைக்கிறது.

அடுத்தவர் அமைதியைக் குலைத்து நன்மை புரிவதையும் தடுத்துவிடுகிறது.

கண்ணிருந்தும் குருடராய் செவியிருந்தும் செவிடராய் வாழும் ஆன்மிக ஊனத்திலிருந்து விடுபடுவோம். இயேசு, மொழி இழந்த ஒருவரைப் பேசச் செய்தபோது வரவேற்று மகிழ்ந்து இறைபுகழ் கூறாது, வாய்கூசாது குறைகாணும் இரட்டை மனநிலையை அவர் தோலுரித்துக்காட்டுகிறார். வாழ்த்திப் பேச முடியாவிட்டாலும் தாழ்த்திப் பேசுவதைத் தவிர்ப்போம்.

**யே.சுபீட்சன்,**
கொழும்புத்துறை

# இனவாதச் சிந்தனையுடன் செயற்படும் பொலிஸார்

*சிறீதரன் சீற்றம்*

> **பெண்களை ஆண் பொலிஸார் தொட முடியுமா? தூக்க முடியுமா? அவர்களின் கை கால்களைப் பிடித்து இழுக்க முடியுமா? சப்பாத்துக்கால்களால் உதைக்க முடியுமா? இதற்கான வீடியோ ஆதாரங்கள் உண்டு.**

கொழும்பு,மார்ச் 26

எதிர்க்கட்சி பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொண்டு அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தது.

அதனை வேடிக்கை பார்த்த பொலிஸார், தங்களின் பிள்ளைகளுக்கு நீதி கோரிப் போராட்டம் நடத்திய தமிழ்த்தாய்மார்கள் மீது மிகக்கேவலமான தாக்குதலை நடத்தியுள்ளனர். சிங்களவர்களுக்கு ஒரு சட்டம், தமிழர்களுக்கு ஒரு சட்டம் என்பதையே வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதமரின் வருகையை அடுத்து மட்டுவிலுக்குச் சென்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை, பொலிஸார் பஸ்ஸிலிருந்து இறங்க விடாது தடுத்தும், இறங்கியவர்களைத் தாக்கியும் மிகக்கேவலமான முறையில் நடந்துகொண்டனர்.

பெண்களை ஆண் பொலிஸார் தொட முடியுமா? தூக்க முடியுமா? அவர்களின் கை கால்களைப் பிடித்து இழுக்க முடியுமா? சப்பாத்துக்கால்களால் உதைக்க முடியுமா? இதற்கான வீடியோ ஆதாரங்கள் உண்டு.

ஒரு வாரத்துக்கு முன்னர் எதிர்க்கட்சி நடத்திய ஆர்ப்பாட்டத்தில், சிங்கள மக்கள் சவப்பெட்டிகளுடன் வந்து, பொலிஸார் மீது அந்தச் சவப்பெட்டிகளை எறிந்து தாக்கியுமிருந்தனர். அப்போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பொலிஸார், தங்களின் பிள்ளைகளைத் தேடி வந்த தாய்மார் மீது மட்டும் மிகக்கேவலமான முறையில் நடந்துள்ளனர்.

நாடு மோசமான சூழலுக்குள் போகும் நிலையிலும், இன்னும் அதே இனவாதச் சிந்தனையுடன்தான் பொலிஸாரும், இந்த ஆட்சியாளர்களும் செயற்படுகின்றனர்.

இலங்கையின் வரலாற்றில் பதிவு செய்யப்படவேண்டிய துக்ககரமான சம்பவம் இது . இது தொடர்பில் சிங்கள மக்களும் அவர்களின் தலைவர்களும் வெட்கப்படவேண்டும். சிங்களவர்கள்மீது ஒரு சட்டமும், தமிழர்கள்மீது ஒரு சட்டமும் பிரயோகிக்கப்படுவது மிகவும் மோசமானது- என்றார். (ஒ-4-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்



## எரிகிற வீட்டில் பிடுங்குதலும் தர்மமே !

ஓர் இனத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியாக, முதுகெலும்பு தமக்கும் உண்டு என நிரூபிக்கும் வகையில் ஜனாதிபதியுடனான பேச்சில் நடந்து கொண்டிருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. ஜனாதிபதியின் அழைப்பின் பேரில், அவரது வாசஸ்தலத்துக்கே சென்று சந்தித்தபோதும் கூட, தமிழ் மக்களின் எரியும் பிரச்சினைகளான அரசியல்கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி அபகரிப்பு என்பவற்றோடு புலம்பெயர் தமிழர்கள் முதலிடுவதற்கான சந்தர்ப்பத்தை உண்டாக்குதல் போன்ற நான்கு விடயங்கள் குறித்தும் கூட்டமைப்பினர் ஆணித்தரமாக ஜனாதிபதிக்கு எடுத்துரைத்துள்ளனர்.

வழக்கமாக தமிழர் தரப்பின் கருத்துக்களை 'நீங்கள் சொல்வது போல எதுவுமில்லை. காணாமல் போனோர் கனடாவில், அரசியல் கைதிகள் என்றே யாருமில்லை, காணியை நாம் அபகரிக்கவே இல்லை' என்றெல்லாம் அலட்சியமாகப் பதில் சொல்லும் ஆளுந்தரப்பு, நேற்றைய பேச்சின்போது அளவுக்கு மீறிய பணிவையும், தலையாட்டலையும் வெளிப்படுத்தியதுதான் ஆகப்பெரிய ஆச்சரியம். சில சமயங்களில் இந்த ஆச்சரியத்தின் பின்னணியில் சர்வதேச நாணயநிதியத்தினதோ அல்லது இந்தியாவினதோ அழுத்தங்களும் இருக்கக்கூடும்.

என்னதான் தமிழர் தரப்பின் கருத்துக்களை செவிமடுப்பதாக அல்லது ஆவன செய்வதாக அரசாங்கம் காட்டிக் கொண்டாலும், அதன் செயற்பாடுகள் எந்தளவு தூரம் நம்பகத்தன்மையோடு இருக்கப் போகின்றன என்பதும் கேள்விக்குறிதான். ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டிய பல விடயங்களை, இதுவரையும் கேட்டறியாதவர்கள் போல, அப்பாவித்தனமாக முகத்தை வைத்துக்கொண்டு செவிமடுத்தது அரசதரப்பு. குறிப்பாக 'காணி அபகரிப்பில் இப்போதும் படையினர் ஈடுபடுகின்றனரா? இதுவரை அப்படி எனக்குத் தெரியாதே' என்று ஜனாதிபதி கோத்தாபய, அவித்த மீன் துடித்த கதையாக சொன்னதுதான் ஆகப்பெரும் அபத்தம். ஒரு நாட்டின் ஜனாதிபதிக்கு, அதுவும் போரை முடித்துவைத்தது தானே என்று பீற்றிக் கொள்பவருக்கு, இலங்கையின் புலனாய்வுத்துறைத் தகவல்களுக்கு முன்னுரிமை கொடுப்பவருக்கு, இதே நாட்டில் அடிக்கடி நிகழும் காணி அபகரிப்புகளும், அதற்கு எதிரான மக்கள் போராட்டங்களும் தெரியாதென்பதை சிறு குழந்தை கூட நம்பாதே. அவ்வளவு ஏன், இதே ஜனாதிபதியின் பெயரில் வட்டுவாகலில் இருக்கும், 'கோத்தாபய கடற்படைத் தளத்துக்காக' காணி அபகரிக்க எடுக்கப்படும் முயற்சிகள் கூடவா தெரியவில்லை? இப்படி நாட்டின் ஒருபகுதியில் அதி தீவிரமாக முனைப்புப் பெற்றுள்ள ஒரு பிரச்சினையைப் பற்றியும், அதற்கு எதிரான மக்களின் கிளர்ச்சியைப் பற்றியும் அறியாத ஒரு நபரையா இந்த நாட்டை பாதுகாக்கக்கூடிய பலமான தலைவர் என்று 69 லட்சம் சிங்கள மக்களும் நம்பினர்?

ஒருவேளை கூட்டமைப்பினரோடு காணி அபகரிப்பு பற்றிய விடயத்தை கலந்துரையாடாமல் தவிர்க்கவும், இப்படி ஒரு பொய்யை கோத்தாபயவும், பிரதமரும் சொல்லியிருக்கலாம். ஏனெனில் காணாமல் ஆக்கப்பட்டோர் கனடாவில் இருக்கிறார்கள் என்று சொல்வதைப்போன்று காணி அபகரிப்பு விடயத்தை தட்டிக்கழிக்க முடியாது. மனிதர்களை வேண்டுமென்றால் கொன்று, அவர்களின் தடயங்களை இல்லாதொழிக்க முடியும். கண்காணாத இடத்தில் வெளியுலகுக்குத் தெரியாமல் தடுத்து வைத்திருக்கவும் முடியும். ஆனால் காணி விடயத்தில் அப்படிச் செய்யமுடியாதே. கண்ணுக்கு முன்னால் சாட்சியமாக விரிந்து கிடக்கும் நிலத்தை அபகரிக்கவில்லை என்று சாதிக்கமுடியாதே. அந்த அபகரிப்புக்கு எதிராக நிகழும் மக்கள் போராட்டங்களையும் பொய்யென்று சொல்ல முடியாதே. ஏதேனும் தீர்வை உடனடியாகக் கொடுக்கவேண்டுமல்லவா. அதனால்தான் 'அப்படி அபகரிப்பு நடக்கிறதா?' என்று புதிதாக அறிபவர் போல நடித்து, அந்த விடயத்தை தற்காலிகமாக திசை திருப்பிவிட்டனர் அரசதரப்பினர். பின்னர் காணி அபகரிப்புப் பழியை தனியே இராணுவத் தளபதியின் தலையில் சுமத்தியும் விட்டனர். எனினும் இந்த நடிப்பு மன்னர்களின் ஜாலங்களுக்கு கூட்டமைப்பு இன்னொரு முறை ஏமாறக்கூடாது. அரசதரப்பின் இப்போதையை குழைவும், தலையாட்டுதல்களும் தானாக ஏற்பட்ட மனமாற்றத்தால் உண்டானவையல்ல. அது வலிந்து சர்வதேசத்தாலும், இந்தியாவாலும், நாணய நிதியத்தாலும், பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிப்பதற்காகவும் நிகழ்ந்த ஒன்றே. எனவே இந்தச் சந்தர்ப்பத்தை, பயன்படுத்தும் வகையே நேற்றைய பேச்சில் காட்டிய அதே உறுதியுடனும், தீவிரத்துடனும் கூட்டமைப்புத் தொடரவேண்டும். இந்தப் பொருளாதார நெருக்கடியை வைத்துத்தான் எமக்கான கோரிக்கைகளை நிறைவேற்றச் செய்யலாம். ஒருவேளை இந்த நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டுவிட்டால், மீண்டும் கோத்தா அண்ட் கோ முருங்கைமரம் ஏறிவிடும். எனவே இதுதான் எமக்கான சந்தர்ப்பம். அதைக் கூட்டமைப்பு கச்சிதமாகப் பயன்படுத்த வேண்டும். சிலவேளைகளில் எரிகிற வீட்டில் பிடுங்குவது கூட தர்மமாகலாம்.

நாளொரு நல்வார்த்தை

"கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்"
- தந்தை பெரியார்




# பணத்தால் சாதிக்கலாமென கனவு காணும் கூட்டமைப்பு

## கம்மன்பில தெரிவிப்பு

**கொழும்பு,மார்ச் 26**

**போரால் செய்ய முடியாததை பணத்தால் செய்துகொள்ளும் முனைப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சர்வ கட்சி மாநாட்டில் பங்கேற்றது என்று பிவித்துரு ஹெல உறுமய கட்சித் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**



மல்வத்து மாநாயக்க தேரருடனான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அரசாங்கம் பொருளாதார ரீதியில் வீழ்ந்து கிடக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்றது.
அதேவேளை இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் விக்டோரியா நூலண்ட், மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறும், புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சு நடத்துமாறும் வலியுறுத்தினார் என்றும் குறிப்பிட்டார்.

(ஒ-4,இ)

# 21 ஆவது திருத்தத்தை கையளித்தார் விஜயதாஸ

கொழும்பு,மார்ச் 26
சிறிலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச, அரசமைப்புக்கான 21 ஆவது திருத்தத்தை முன்வைத்துள்ளார்.
இதில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் அமைச்சரவைக்கு வழங்கப்பட வேண்டும். நாடாளுமன்றால் உடனடியாக ஒரு புதிய ஜனாதிபதி தெரிவு



செய்யப்பட வேண்டும் உள்ளிட்ட முன்மொழிவுகளை உள்ளடக்கியுள்ளார்.
ஒரு தனிநபர் சட்டவரைவாக இது நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனூடாக அரசமைப்புக்கான 21 ஆவது திருத்தம் முன்மொழியப்பட்டுள்ளது. இதன்மூலம் நாடாளுமன்ற நிறைவேற்று அதிகாரத்தைக் கண்காணிப்புச் செய்வது சாத்தியமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஒ-4,ரி1)

நாளை
27.03.2022
ஞாயிற்றுக்கிழமை
பங்குனி 13
சுபநேரம் : 09.14 - 10.44
ராகுகாலம்: 04.44 - 06.14
உலக திரையரங்கு தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## முத்துக்குமாரு மார்க்கண்டு

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு மார்க்கண்டு அவர்கள் கடந்த (23.03.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் நித்தியசொரூபியின் அன்புக் கணவரும், கோபிகிருஸ்ணன், இராதாகிருஷ்ணன், மோகனகிருஷ்ணன், முரளிகிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவாஜினி (கவிதா), சிவகாந்தன், நளினி ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், சிந்துஜா, தனுஷா, அனோஜா, சுனித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், யசோதா, அகல்யா, ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, ஆறுமுகம், சங்கரலிங்கம், சண்முகநாதன், சற்குணதேவி மற்றும் கோபாலசிங்கம், வரவதிராசன், சிவபாலன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், செல்லத்துரை மற்றும் பிரணவ சொரூபி, சிவபாலன், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் சிவகுமார், சந்திரபாலன், கனகம்மா, புஸ்பவதி, அன்னலட்சுமி, தையல்நாயகி, செல்வநாயகம், ஜெயவாணி, கலையரசி, புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும், விஜயலட்சுமி, தங்கராணி, சதாசிவம், மகேஸ்வரி, நேசராணி, ஜெயவதனி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2022) ஞாயிற்றுக் கிழமை அன்னாரது இல்லத்தில் காலை 8.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
077 816 4639

தகவல் :
குடும்பத்தினர்

(CS 43768) (3/6)

# மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் மீண்டும்

## சட்டத்தரணி நிறஞ்சன் தெரிவிப்பு

மன்னார்.மார்ச் 26

மன்னார் 'சதொச' மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக மன்றில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ்.நிறஞ்சன் தெரிவித்துள்ளார்.

மன்னார் சதொச மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கில் முன்னிலையாகும் சட்டத்தரணிகளுக்கான அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்று வந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் தோற்ற முடியாது என்று 2020 ஆம் ஆண்டு கட்டளை ஆக்கப்பட்டிருந்தது.

குறித்த கட்டளைக்கு எதிராக பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் மீளாய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த மனு தொடர்பாக கடந்த மாதம் எமக்குச் சார்பான கட்டளை ஆக்கப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்டவர்களுக்காக முன்னிலையாகும் சட்டத்தரணிகள் நீதிமன்றில் எந்த நேரத்திலும் தோற்றலாம், வாதாடலாம் என்கின்ற அடிப்படையில் முக்கிய தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதற்கமைவாக பல கட்டளைகள் மன்னார் நீதிமன்றுக்கு, வவுனியா மேல் நீதிமன்றால் வழங்கப்பட்டிருந்தன. குறித்த மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் வெளிப்படையாக இருக்க வேண்டும். இதனைப் பாதிக்கப்பட்டவர்கள் 10 பேர் பார்வையிடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

செய்திகளைச் சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு ஒரு மணித்தியாலத்துக்கு 10 நிமிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ள அடிப்படையில், இதன் இறுதித் தீர்மானங்களை மன்னார் நீதிவான் நீதிமன்றம் எடுப்பதற்கு ஒரு வழிகாட்டியாக இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் குறித்த வழக்கில் முன்னிலையாகும் சட்டத்தரணிகளுக்கான அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்றில் சட்டத்தரணிகளாகிய நாங்கள் முன்னிலையாகினோம்.

மன்னார் பொலிஸார் சமர்ப்பணம் செய்திருந்தனர். எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி மன்றில் முன்னிலையாக முடியும் என்றதன் அடிப்படையில், மன்னார் நீதிவான் [illegible] தவணையிடப்பட்டுள்ளது என்றார்.

(ஒ-4,56)

# மரண அறிவித்தல்



## திருமதி லோகநாயகி ஜெயரத்தினம்

மண்ணில் 01.05.1947 விண்ணில் 22.03.2022

முதலி கோவில் வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. லோகநாயகி ஜெயரத்தினம் அவர்கள் கடந்த (22.03.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சடையர், தையல்நாயகி தம்பதியின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற அப்புத்துரை பூமணி தம்பதியின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற அப்புத்துரை ஜெயரத்தினம் (முன்னாள் செயலாளர் / புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு) அவர்களின் அன்பு மனைவியும் துஷ்யந்தி, தமயந்தி, கல்யாணியின் பாசமிகு தாயாரும் புவிராஜன், நக்கீரன், கண்ணன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜானகி, அர்ஜூன், பீஷ்மன், ஆதிரன், மிர்ணாளினி ஆகியோரின் ஆசை அம்மம்மாவும் காலஞ்சென்ற கங்கைநாதனின் ஆருயிர்த் தங்கையும் காலஞ்சென்ற கமலநாயகி மற்றும் லிங்கநாதன், ரங்கநாயகி, சிவலோகநாதன் ஆகியோரின் பாசமிகு அக்காவும், ராகவன், சிறீராம், காயத்ரி, சுகன்யா, துளசிதா, விமலகாந், ஷர்மிளா ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் கார்த்திகா, உமாசங்கர், அபிநந், ஆரணன், சாரங்கன், அருண்நாத், லக்சிகா ஆகியோரின் ஆசைப் பெரிய மாமியும், ஆரபி, ராகவி, ரிஷ்ணா, கவீஷ், பிரணாவ் ஆகியோரின் பாசமிகு பெரியம்மம்மாவும் சாருஜன், தனுத்ரா ஆகியோரின் பெரியமாமிப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவிலில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56, முதலி கோவில் வீதி,
2ம் ஒழுங்கை,
தாவடி, கொக்குவில்

தகவல்
குடும்பத்தினர்

(CS 43755) (3/6)

# யாழில் எரிவாயு திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்.சிறுவர் நீதிமன்றத்துக்கு முன்னால் உள்ள வீட்டில் சமையல் எரிவாயு திருடப்பட்டுள்ளது.

நீதிமன்றக் காவலர்கள் கடமையில் உள்ள போதே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இது தொடர்பில் வீட்டின் உரிமையாளர் தெரிவித்ததாவது: எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்து எரிவாயுச் சிலிண்டரை வீட்டின் வெளியே பொருத்தியிருந்த நிலையிலேயே 2 ஆவது தடவையாக இந்தத் திருட்டு இடம்பெற்றது. (ஒ-14,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்ரான்கான் அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

**இஸ்லாமாபாத், மார்ச், 26**
**பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் அந்த நாட்டு நாடாளு மன்ற சபாநாயகரிடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**



பாகிஸ்தானில் நாட்டின் பொருளாதாரம் மற்றும் வெளியுறவு கொள்கையை இம்ரான் கான் தவறாக நிர்வகிப்பதாக எதிர்க்கட்சிகளால் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது.
இந்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நாளை மறுதினம் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது.
பாகிஸ்தானின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி, நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு தனிப்பெரும்பான்மை மட்டுமே தேவை. நாடாளுமன்றத்தில் 342 உறுப்பினர்கள் உள்ளனர், அதாவது 172 உறுப்பினர்கள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தால், இம்ரான் கான் பதவி விலகவேண்டும்.
இந்தத் தீர்மானத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க ஆளும் கட்சி தரப்பும் தீர்மானத்தை நிறைவேற்ற எதிர்க்கட்சிகளும் முயற்சித்து வருகின்றன. பாகிஸ்தானில் இதுவரை எந்தவொரு கட்சியும் தமது பதவிக் காலத்தை நிறைவு செய்யவில்லை.
இந்தநிலையில் இம்ரான் கான் தெரிவிக்கையில்,
“என்ன வந்தாலும் நான் பதவிவிலகமாட்டேன். வஞ்சகர்களின் அழுத்தத்துக்கு நான் ஏன் பதவி விலக வேண்டும்?” என்று அவர் தெரிவித்துள்ளார்.
இதனால் பாகிஸ்தானில் அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ளது . (ச-இ)



## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பிரச்சினை தீரும். மனதில் நிம்மதி உண்டாகும். பிறருக்கு பல நன்மைகளைச் செய்து அவர்களிடம் வாழ்த்தைப் பெறுவீர்கள். அழகிய ஆடை, ஆபரணங்கள் வாங்குவதால் மகிழ்ச்சியில் திளைப்பீர்கள்.

**இடபம்:** உங்களது அவசரப் போக்கினால் தொல்லைகள் வந்து நீங்கும். வீண்பழி வராதபடி கவனமாக இருக்க வேண்டிய நாள். பிறர் ஒத்துழைப்பு உங்களுக்கு மகிழ்ச்சி தரும்.

**மிதுனம் :** கடந்தகால மனக்கவலை மறையும். உழைப்புக்கூடும். எதிர்பாராத தனவரவால் ஏற்றமும் நிறைவும் காண்பீர்கள். உறவினரின் அன்பால் குடும்பத்தில் மகிழ்ச்சி நீடிக்கும்.

**கடகம்:** உங்களின் நல்ல எண்ணம் ஈடேறும். எதிர்பாராத தனவரவு உண்டு. குடும்பத்தினர் மூலம் முன்னேற்றத்துக்கான ஆலோசனை கிடைக்கும். பழைய பிரச்சினை இன்று விலகுவதால் நிம்மதி ஏற்படும் நாள்.

**சிம்மம்:** புதிய தகவலால் உற்சாகம் அடைவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். தொழிலில் சிறு சுணக்கம் ஏற்படும். அதை முனைப்புடன் தீர்ப்பீர்கள். முயற்சியால் ஏற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** தொல்லை ஏற்பட்டு நீங்கும். வராதிருந்த பணம் வசூலாகும். பணியில் வேகத்தடை இருக்கும். செய்தி ஒன்று மகிழ்ச்சியைத் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்:** பெரியோருக்கு பணிவிடைகள் செய்து அவர்களது ஆசியைப் பெறுவீர்கள். கல்வி, பணியின் பொருட்டு வெளிநாட்டுப் பயணம் உறுதியாகும். பேச்சினால் ஏற்பட்ட பிரச்சினை தீர்ந்து நிம்மதி கிடைக்கும்.

**விருச்சிகம்:** தர்மச் செயல்களுக்கு தாராளமாகச் செலவு செய்வீர்கள். புதிய வேலைவாய்ப்பு ஏற்படும். மனதில் நிம்மதி உண்டாகும். சிறு பயணத்தால் நீங்கள் நினைத்தது நிறைவேறும். நன்மை கிடைக்கும்.

**தனுசு:** சிலர் தொழிலில் முன்னேற்றம் காண்பர். மகிழ்ச்சி கூடும். பல நாளாக எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். அமைதி கிடைக்கும். மனைவிவழி உறவினர் மூலம் உதவி கிடைக்கும்.

**மகரம்:** எதிலும் ஆலோசித்துச் செயற்படுவது நல்லது. செயல்களிலும் வார்த்தைகளிலும் அதிக கவனம் தேவை. பணியாளர்கள் பாராட்டுப் பெறுவர். மனஅழுத்தம் குறையும்.

**கும்பம்:** பணியாளர் தங்கள் திறமை மிக்க செயல்களால் உயர்வர். பயணம் நல்ல பலன் தரும். முயற்சியில் முன்னேற்றம் உண்டு. குடும்பத்தினரிடம் இருந்துவந்த வாக்குவாதங்கள் மறையும்.

**மீனம்:** பிரச்சினை குறையும். விரும்பிய செலவால் மகிழ்ச்சி ஏற்படும். எவரிடமும் வாக்குவாதம் செய்யவேண்டாம். அமைதியாக இருங்கள். பொழுதுபோக்கு அம்சத்தில் கவனம் செல்லும். பணவரவு கூடும்.



## புடினின் ரகசியக் காதலி நாடு கடத்தப்படுவாரா?

மொஸ்கோ, மார்ச் 26
ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் ரகசியக் காதலியை நாடு கடத்தவேண்டும் என்று புடின் எதிர்ப்பாளர்கள் கோரிக்கை மனுவொன்றை சுவிற்சர்லாந்து அரசுக்கு அனுப்பியுள்ளனர்.
ரஷ்ய ஜனாதிபதி புடினின் ரகசியக் காதலியான அலினா கபேவா முன்னாள் ஜிம்னாஸ்ரிக் வீராங்கனையாவார்.
இவர் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.
இவர் புடினுடனான காதலில் பிறந்த குழந்தைகளுடன் சுவிற்சர்லாந்தில் வாழ்ந்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.
இந்த நிலையில் புடின் எதிர்ப்பாளர்கள், அவரது ரகசியக் காதலியை நாடுகடத்த வேண்டும் என்று கோரிக்கை மனு ஒன்றை சுவிற்சர்லாந்து அரசுக்கு அனுப்பியுள்ளனர். (ச-இ)

சென்னையில்

## பெற்றோல், டீசல் விலை உயர்வு

சென்னை, மார்ச் 26
சென்னையில் நேற்று பெற்றோல், டீசல் விலை மீண்டும் அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலைக்கேற்ப எரிபொருள் விலையை தினசரி நிர்ணயிக்கும் நடைமுறைக்கு அரசு அனுமதியளித்துள்ளது. அதன்படி எண்ணெய் நிறுவனங்கள் நாள்தோறும் பெற்றோல் மற்றும் டீசல் விலையை மாற்றியமைக்கின்றன.
இந்தநிலையில் நேற்று மீண்டும் பெற்றோல், டீசல் விலை அதிகரித்துள்ளன.
பெற்றோல் மற்றும் டீசல் லீற்றருக்கு தலா 76 ரூபாவாக அதிகரித்து ஒரு லீற்றர் பெற்றோல் 103 ரூபா, டீசல் 93ரூபா என விற்பனை செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## தனியார் பஸ் உரிமையாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம்

திருவனந்தபுரம், மார்ச் 26
கேரளா முழுவதும் தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்றுமுன்தினம் முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.
பெற்றோல், டீசல் விலை உயர்வைத் தொடர்ந்து தனியார் பஸ்களின் குறைந்த பட்சக் கட்டணத்தை ரூ.12 ஆக உயர்த்த வேண்டும் எனக் கோரியே இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை காலவரையறையின்றி ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

## டுபாய் சென்றார் ஸ்டாலின்

சென்னை, மார்ச் 26
தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் 4 நாள் பயணமாக டுபாய் சென்றுள்ளார்.
டுபாய் விமான நிலையத்தில் அவருக்கு வெளிநாட்டுவாழ் தமிழர்கள் வரவேற்பளித்துள்ளனர்.
டுபாயில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் சர்வதேச கண்காட்சி 6 மாதங்கள் வரையில் நடத்தப்படும்.
இந்தக் கண்காட்சியில் நேற்று 25ஆம் திகதி முதல் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை 'தமிழ்நாடு வாரம்' கடைப்பிடிக்கப்படுகிறது. அதன்படி கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள அரங்கை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்துவைத்தார்.
இதில் தமிழக சிறப்பை உலகுக்கு எடுத்துக்காட்டும் காட்சிப்படங்கள் திரையிடப்படுகின்றன. மேலும் மு.க.ஸ்டாலின் அங்குள்ள முதலீட்டாளர்களைச் சந்தித்து தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்க்கும் பொருளாதாரம், வெளிநாட்டு வர்த்தகம் உள்ளிட்டவை குறித்து கலந்துரையாடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## மாடியிலிருந்து குதித்து குடும்பம் உயிர்மாய்ப்பு

சுவிற்சர்லாந்தின் மோன்ட்ரீயுக்ஸ் பகுதியில் பொலிஸார் விசாரணைக்கென வந்த போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தொடர்மாடியின் 7 ஆவது மாடியிலிருந்து குதித்து உயிர்மாய்த்துக் கொண்டுள்ளனர்.
கடந்த [illegible] கொன்[illegible]தின் தலைவரை கைதுசெய்ய பொலிஸார் சென்ற நிலையிலேயே கதவைத் திறக்காமல் அனைவரும் 7ஆவது மாடியிலிருந்து குதித்துள்ளனர். இதில் நால்வர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும் [illegible] மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வருடத்தின் இறுதிக்குள் 1.3 மில்லியன் சுற்றுலாவிகள்

## அரசு எதிர்பார்ப்பு

கொழும்பு, மார்ச் 26

இலங்கையில் இந்த வருடத்தின் இறுதிக்குள் 1.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு சுற்றுலாத்துறையின் சகல பிரிவுகளும் தயாராக வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ச தெரிவித்தார்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையை நேற்று முன்தினம் பார்வையிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையால் ஆண்டுக்கு 10 பில்லியன் டொலரைத் திரட்ட அரசு இலக்கு வைத்துள்ளது. ஈஸ்டர் தாக்குதல் சுற்றுலாத்துறையில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. இது கொரோனாத் தொற்றால் மேலும் வீழ்ச்சியடைந்தது. உரிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி சுற்றுலாத்துறையின் விரைவான வளர்ச்சிக்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது. தடுப்பூசி வேலைத்திட்டத்தின் வெற்றியால் சுற்றுலாத்துறை மீண்டும் வளர்ச்சி யடைந்துள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையை வீழ்ச்சியடையச் செய்வதற்கு பல்வேறு வகையான திட்டமிட்ட பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய பின்னணியிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாகவே உள்ளது. வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். நாட்டில் கால் வைத்து முதல் மீண்டும் திரும்பிச் செல்லும் வரை உயர்தர விருந்தோம்பலுடன் கவர்ச்சிகரமான சேவையை வழங்குவது சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

விமான நிறுவனங்களுடன் கலந்துரையாடி இலங்கைக்கான விமானப் பயண எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

யால, குமண, மின்னேரியா மற்றும் ஏனைய பூங்காக்கள் மற்றும் கரையோரப் பகுதிகளை சுற்றுலாத் தலங்களாகப் பேணுவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

(ஓ-4-இ)

# அவமதித்தது மத்திய வங்கி



## அரசநிதி பற்றிய குழு வருத்தம்

கொழும்பு, மார்ச் 26

**நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை தொடர்பில் ஆராய்வதற்காக, அரசநிதி பற்றிய குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்த மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்ட உயரதிகாரிகள் வருகை தராமை வருத்தமளிக்கின்றது. மத்திய வங்கியின் இந்தச் செயற்பாடு நாடாளுமன்றத்தை அவமதிப்பதாகும் என்று குழுவின் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.**

அரசநிதி பற்றிய குழு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் கூடியது.

இதற்கு மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் மத்திய வங்கி உயரதிகாரிகள், நாணயச் சபையின் ஏனைய அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

எனினும் உலக வங்கியுடனான கலந்துரையாடலில், மேற்படி குழுவிலிருந்து எவரும் கலந்துகொள்ளவில்லை. மத்திய வங்கியின் இந்தச் செயற்பாடு நாடாளுமன்றத்தை அவமதிப்பதாகும்.

இது தொடர்பில் கண்டறிவதற்கு சபாநாயகருக்கு முறைப்பாடு செய்வது பொருத்தமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அரச நிதி பற்றிய குழு மீண்டும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஓ-4-இ)

# வலி.மேற்கு பிரதேசசபையில் கழிவகற்றல் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 26

வலிகாமம் மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட 25 கிராம அலுவலர் பிரிவுகளில் கழிவுகளைத் தரம் பிரிப்பதற்காக விழிப்புணர்வு நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளன.

சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போதே கழிவுகளைத் தரம் பிரித்தல் தொடர்பாக சபையின் தவிசாளர், உறுப்பினர்களால் கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய முதலில் கழிவுகளைத் தரம் பிரித்தல் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

அதற்காக பொருத்தமான வளவாளர்களைத் தெரிவு செய்து எதிர்வரும் காலப்பகுதியில் கிராம அலுவலர் ரீதியாக தரம் பிரித்தல் செயற்பாடுகளை செயன்முறையாக செய்து காட்டவேண்டும் என்று சபையின் தவிசாளர் நடனேந்திரன் தெரிவித்தார்.

(ஓ-14-125)

# சாவகச்சேரி நகரப்பகுதியில் தரமற்ற உணவுகள் விற்பனை

## சபை அமர்வில் சுட்டிக்காட்டு

சாவகச்சேரி, மார்ச் 26

சாவகச்சேரி நகரப்பகுதியில் உள்ள உணவகங்களில் தரமற்ற உணவுகள் விற்பனை செய்யப்படுகின்றன என்று சாவகச்சேரி நகர சபையின் அமர்வில் உறுப்பினர் சு.நிதிகேசன் சுட்டிக்காட்டினார்.

அசைவ உணவகங்களில் பழுதடைந்த கடலுணவுகள் சமைக்கப்படுவதால், அவற்றை வாங்கிச் செல்வோர் சாப்பிட முடியாமல் வீச வேண்டியுள்ளது.

சந்தை வியாபாரிகள் குளிரூட்டப்பட்ட கடலுணவுகளை உணவகங்களுக்கு வழங்குவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே பொதுச்சுகாதாரப் பரிசோதகர் மூலம் தினமும் கடலுணவு விற்பனை மற்றும் உணவகங்களில் பரிசோதனை மேற்கொண்டு தரமான உணவு மற்றும் கடலுணவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். மக்களுக்குத் தரமான உணவுகள் கிடைக்க உறுப்பினர்களாகிய நாம் நடவடிக்கை எடுக்கின்றபோதிலும், சுகாதாரப் பகுதியினரின் போதிய கண்காணிப்பு இல்லாததால் தரமற்ற உணவுகளைக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதனை ஏனைய உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டனர்.

(ஓ-4-9)

# ஜீவன் தொண்டமான் மீது ஆளும் கட்சியினர் பாய்ச்சல்

கொழும்பு, மார்ச் 26

ஜனாதிபதி தலைமையிலான சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்தமையால், ஆளும் கட்சியினர் இருவர், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானை விமர்சித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உணவகத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இதில் அரசின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரும், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும், அவரை விமர்சித்துள்ளனர்.

அமைச்சராக பதவி வகித்துக்கொண்டு, சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்ததை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படிச் செய்யவேண்டுமாயின் அமைச்சர் பதவியில் இருந்து விலகி விட்டே அதனைச் செய்ய வேண்டும் என்று அவர்கள் ஜீவன் தொண்டமானிடம் கூறியுள்ளனர்.

இதற்குப் பதிலளித்துள்ள ஜீவன் தொண்டமான், அமைச்சராகப் பதவி வகித்துக் கொண்டு அரசை விமர்சிப்பதா இல்லையா என்பது தொடர்பான தீர்மானத்தை நானே எடுப்பேன். அரசில் அங்கம் வகிப்பதா இல்லையா என்பதைக் கட்சியே முடிவு செய்யும் என்றார்.

(ஓ-4-இ)



# முதியவர்களுக்கு சத்துணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 26

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் முதியோருக்கான சத்துணவு வழங்கும் திட்டத்தில் பண்டத்தரிப்பு 4 ஆம் வட்டாரத்திலுள்ள முதியோருக்கான சத்துணவுப் பொதிகள் பண்டத்தரிப்பு கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

(ஓ-14-125)

# கட்டிவைக்கப்பட்ட மாட்டைக் காணோம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றில் கட்டிவைக்கப்பட்டிருந்த மாடு திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள கதிர்வேல் சண்முகநாதன் என்பவரது வீட்டில் யாரும் இல்லாத வேளை கட்டி வைக்கப்பட்டிருந்த 85 ஆயிரம் ரூபா மதிப்புள்ள நாம்பன் மாடு ஒன்றே இவ்வாறு திருடப்பட்டது.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது

(ஓ-14-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எரிவாயு சிலிண்டருக்கும் குடும்ப அட்டை முறைமை

### இல்லாதவர்கள் சிரமம்

கிளிநொச்சி, மார்ச் 26

கிளிநொச்சி மாவட்டத்தில் குடும்ப அட்டை மற்றும் கடை அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு மட்டுமே சமையல் எரிவாயு விநியோகிக்கப்படுகின்றது. இதனால் ஏனையவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் உள்ள சமையல் எரிவாயு விநியோக நிலையங்களில் நேற்று எரிவாயு விநியோகிக்கப்பட்டது.

இதனால் அதிகாலையிலிருந்து காத்திருந்த பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். குடும்ப அட்டை மற்றும் கடை அனுமதிப்பத்திரம் இல்லாமையால் அவர்கள் திரும்பிச் செல்ல நேரிட்டது.

(ஒ-4-113)



## குடும்பப் பங்கீட்டு அட்டைக்கு ரூ.500 க்கு மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், மார்ச் 26

ஊர்காவற்றுறையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஒரு குடும்பப் பங்கீட்டு அட்டைக்கு ரூ.500 என்ற அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது. அத்தோடு குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் இல்லை எனும் அறிவித்தலும் ஒட்டப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் ஒரேயொரு எரிபொருள் நிரப்பு நிலையம் மாத்திரமே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஓ-14-20)

## சாவகச்சேரி சமுர்த்தி வங்கிக்கு பொருத்தமான இடத்தில் காணி

சாவகச்சேரி, மார்ச் 26

சாவகச்சேரி வலய சமுர்த்தி வங்கிக்கு கச்சாய் வீதி, மீசாலை, தனங்களப்பு வீதி ஆகிய இடங்களில் தெரிவு செய்யப்பட்ட காணியை வழங்குவது தொடர்பில், நகரசபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபைக்கு அருகில் உள்ள காணியில் சமுர்த்தி வலய வங்கிக் கட்டடம் அமைக்க முற்பட்ட வேளையில், முன்னைய நகரசபை ஆட்சிக் காலத்தில் தடுக்கப்பட்டது.

இந்த விடயம் சபை அமர்வில் விவாதிக்கப்பட்டது.

சிறுவர் பூங்காவுக்குக் கொள்வனவு செய்த காணியில் 15 அடி பாதைவிட்டு பின் பகுதியில் காணி வழங்கலாம் என்று தவிசாளர் தெரிவித்தார். சபை உறுப்பினர்கள் 17 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட சமுர்த்திப் பயனாளர்களின் நலன் கருதி மீசாலை, தனங்களப்பு வீதி, கச்சாய் வீதி ஆகிய இடங்களில் விரும்பும் இடத்தை வழங்கவேண்டும் என்று தெரிவித்தனர்.

(ஒ-4-9)

# சட்டவிரோத மணல்அகழ்வு: கமக்கார அமைப்பு எதிர்ப்பு

மன்னார், மார்ச் 26

**மாந்தை மேற்கு ஆத்திமோட்டை கிராமத்தில் அரசகாணியில், தனி நபர்கள் முறையற்ற விதத்தில் மணல் அகழ்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஆத்திமோட்டை கமக்கார அமைப்பினர், வாகனங்களை இடைமறித்து எதிர்ப்பை வெளியிட்டனர்.**

இதனால் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களுக்கும், ஆத்திமோட்டை கமக்கார அமைப்பினருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த இலுப்பைக் கடவைப் பொலிஸார், மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவித்து, வாகனங்களைச் செல்ல அனுமதித்தனர்.

மணல் அகழ்வின் காரணமாக கள்ளியடி-ஆத்திமோட்டை வீதி கடந்த 10 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படவில்லை. அதனால் வீதியூடாக மக்கள் பயணம் செய்ய முடியவில்லை.

குறித்த பகுதி மேட்டு நில அரசகாணியாகக் காணப்படுகின்ற போதும், தனி நபர்கள் முறையற்ற விதத்தில் மணல் அகழ்வுக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்று மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர். தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதற்கு பொலிஸார், புவிச்சரிதவியல் திணைக்களம், அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளே காரணம் என்று கமக்கார அமைப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



(ஒ-4-213)

## இலங்கையில் வாழ்வாதாரம் படுமோசம்; இந்தியாவில் தஞ்சம் அடையும் நிலைமை

கொழும்பு மார்ச் 26

நாட்டில் உணவுப்பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இலங்கையர்கள் இந்தியாவில் தஞ்சம் அடையும் நிலைமை உருவாகியுள்ளது. எனவே, இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது;

"அரசாங்கம் என்னதான் அறிவிப்புகளை விடுத்தாலும் நாட்டில் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை உள்ளது. எரிசக்தி மற்றும் வலுசக்தி தொடர்பான பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருகின்றது. கல்வித்துறை ஸ்தம்பித்துள்ளது. பரீட்சைகள் பிற்போடப்படுகின்றன. மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விலைகள் அதிகரிக்கின்றன. மக்கள் வாழ்வதற்கு போராடவேண்டியுள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் இருந்து இரு குடும்பங்கள் இந்தியா சென்றுள்ளன. நாட்டில் வாழ வழியில்லை என இங்கிருந்து சென்றவர்கள் கூறியுள்ளனர். இந்த எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பல இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறி, வெளிநாடு சென்றுள்ளனர். எனவே, இதனை சாதாரண விடயமாகக் கருதிவிடமுடியாது. எனவே, அதிகாரிகளை அழைத்து உடனடியாகத் தீர்வுப் பொறிமுறையைத் தயாரிக்குமாறு வலியுறுத்துகின்றோம்." -என்றார்.



(ய-44)

## மருத்துவனையில் மின்சாரம் தடை

சாவகச்சேரி மருத்துவமனையில் கடந்த புதன்கிழமை இரவு இரண்டு மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்பட்டதால், நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

விடுதி நோயாளர்கள் இரவு உணவு அருந்த ஆயத்தமாகிய போது, மின்தடை ஏற்பட்டது. மின்பிறப்பாக்கியூடாகவும் மின்சாரம் வழங்கப்படவில்லை. மருத்துவமனையில் உள்ள மின்பிறப்பாக்கி பகலில் அதிகநேரம் இயங்கியதால், இரவு இயங்கவில்லை என்று காரணம் தெரிவிக்கப்பட்டது. அதனால் மின்சாரம் மீள வழங்கப்பட்டதும் காத்திருந்து உணவருந்த வேண்டியிருந்தது என்று நோயாளர்கள் தெரிவித்தனர்.

(ஒ-4-9)



## வவுனியாவில் வீடு கையளிப்பு

வவுனியா, மார்ச் 26

வவுனியா புதியகற்பகபுரம் கிராமத்தில் வசிக்கும் பொருண்மியம் நலிந்த பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு அண்மையில் வீடு ஒன்று கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம்- குடத்தனை வடக்கு உதவும் உறவுகள் அமைப்பின் ஏற்பாட்டில், தாய்த்தமிழ் பேரவையின் ஆதரவோடு, கனடாவில் வசிக்கும் தெங்காதரன் குடும்பத்தின் நிதியில் குறித்து வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டது.

(ஓ-14)

## வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்ட அரச அதிகாரிகளுக்கு நிவாரணம்

### குழுவின் அறிக்கை கையளிப்பு

கொழும்பு, மார்ε 26

நல்லாட்சி அரசின் கீழ் அரசியல் பழிவாங்கல் நோக்கில் அரச மற்றும் பகுதியளவிலான அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் நேற்று முன்திலம் கையளிக்கப்பட்டது.

குழுவின் அறிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பிரதமர் உடனடியாக அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

(ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். திருவிழா இன்று ஆரம்பம்!

புதுடில்லி, மார்ச் 26



இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடர் இன்று கோலாகலமாக ஆரம்பமாகின்றது. இன்று நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் சென்னையை எதிர்த்து கொல்கத்தா அணி மோதவுள்ளது. இந்த வருடம் 10 அணிகளைக் கொண்டதாக தொடர் நடைபெறுகின்றது. இதன்படி குஜராத் ரைட்டன்ஸ், லக்னோ சுப்பர் ஜெயின்ட்ஸ் அணிகள் இம்முறை புதிய அணிகளாக இணைந்துள்ளன. சென்னை சுப்பர் கிங்ஸின் தலைமைத்துவம் இம்முறை மாற்றப்பட்டு ஜடேஜாவின் தலைமையின் கீழ் அணி களமிறங்கவுள்ளது. அதேபோல் பஞ்சாப் மயங்க் அகர்வாலின் தலைமையிலும், பெங்களூர் டுபிளஸியின் தலைமையிலும், மும்பை ரோகித் சர்மாவின் தலைமையிலும், கொல்கத்தா ஸ்ரேயஸின் தலைமையிலும், குஜராத் ரைட்டன்ஸ் ஹார்திக் பாண்டியாவின் தலைமையிலும், லக்னோ சுப்பர் ஜெயின்ட்ஸ் அணி கே.எல்.ராகுலின் தலைமையிலும், ராஜஸ்தான் சஞ்சு சாம்சனின் தலைமையிலும், ஹைதராபாத் வில்லியம்சனின் தலைமையிலும், டெல்லி ரிஷப் பண்டின் தலைமையிலும் களமிறங்கவுள்ளன. (ம)


# சட்டவிரோத மணல் அகழ்வு இரு சந்தேக நபர்கள் கைது



முல்லைத்தீவு, மார்ச் 26

முல்லைத்தீவு பறங்கியாற்றுப் பகுதியில் சட்டத்துக்குப் புறம்பான வகையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் இருவர் நேற்றுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். பாண்டியன்குளம் குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே மேற்படி இரு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டனர். மணல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உழவியந்திரங்களும் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. சந்தேக நபர்களை மாங்குளம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-19)


# ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞரொருவர் கைது!



மன்னார், மார்ச் 26

தலைமன்னாரில் 220 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையிலேயே மேற்படி போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் இளைஞர் கைதுசெய்யப்பட்டார். சந்தேக நபர் தலைமன்னார் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-56)

# உயர்ந்து ஒளிர்ந்தது தமிழ்!



டுபாயில் நேற்றுமுதல் எதிர்வரும் 31ஆம் திகதிவரை தமிழ்மொழி வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இதை முன்னிட்டு அங்குள்ள உலகின் உயரமான கட்டமான புர்ஜ் கலிபா கட்டடத்தில் 'தமிழ்' என்ற எழுத்து ஒளிரவிடப்பட்டது. தமிழக முதல்வர் ஸ்டாலின் தற்போது டுபாயில் முகாமிட்டுள்ள நிலையில் அந்தக் கட்டடத்தை அவர் நேரில் பார்வையிட்டார். (ம)

# 2,000 தொன் அரிசி வழங்குகிறது சீனா

கொழும்பு, மார்ச் 26

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, 2 ஆயிரம் தொன் அரிசியை இலங்கைக்கு வழங்க சீனா தீர்மானித்துள்ளது. இலங்கையின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு சீன அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளதாக கொழும்பில் உள்ள சீன தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காலங்காலமாக இரு நாடுகளும் பரஸ்பரம் ஆதரவளித்து வருவதால் சீன அரசு இந்த முடிவை எடுத்துள்ளது என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)


10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 • 03 • 1958

இறப்பு 26 • 03 • 2012



யாழ். வேலணையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், யாழ். மண்டைதீவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

அமரர் பொன்னம்பலம் சிவமணி

(சமாதான நீதவான் - Kotahena)

அவர்களின் பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

என் உயிருக்கு உயிரான அப்பா!
ஆண்டுகள் பத்து உங்களை பிரிந்து.
நாங்கள் அனாதைகள் ஆகி ஆண்டுகள் பத்து
என்னை மறக்க எப்படி உங்களுக்கு மனம் வந்தது?

என் பாசத் தந்தையே,
உங்கள் பிரிவால் நானும் அம்மாவும்
பரிதவித்து நிற்கிறோமே
நீங்கள் அறிய மாட்டீர்களா அப்பா?

ஏனப்பா எங்களை மறந்து போனீர்கள்?
சாப்பிட வருகிறேன் என்று கூறிப் போனீர்களே
திரும்பி வராமல் தொலைதூரம் போய்விட்டீர்களே அப்பா!
உங்கள் வரவுக்காக வழி மீது விழி வைத்துக்காத்திருந்தோமே

வந்தது உங்கள் உயிரற்ற உடல் மட்டுமே!
ஏனப்பா நிலையில்லா உலகத்தில்
எங்களை மட்டும் தவிக்க விட்டு ஓடி மறைந்தீர்கள்?
தாங்க முடியவில்லை உங்கள் பிரிவை!

நாங்கள் கண்கள் மூடித் தூங்கி
பத்து வருடங்கள் ஆகிவிட்டது!
நீங்கள் இல்லாத இந்த வாழ்க்கை நிலவு இல்லா
வானம் போல் ஆகிப்போனதே அப்பா

நீங்கள் எங்கு இருந்தாலும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம் அப்பா!

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மகள் மற்றும்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## தங்கம்மா ஐயாத்துரை

யாழ்ப்பாணம் நல்லூர் ராணி வீதியை பிறப்பிடமாகவும், நல்லூர், செங்குந்தா வீதி, மற்றும் கனடா, வன்கூவரை வதிவிடமாகவும் கொண்ட தங்கம்மா ஐயாத்துரை அவர்கள் 22-03-2022 அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சின்னத்தங்கம் தம்பதிகளின் தவப்புதல்வியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-தங்கம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற மகாதேவன் அவர்களின் பாசமிகு தங்கையும், மங்கையர்க்கரசியின் பாசமிகு மைத்துனியும், பாஸ்கரன், சுமதி, பிரபாகரன், சுகிர்தா, சுகந்தி, சுமணா, சுதாகரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், இந்திராணி, காலஞ்சென்ற சண்முகதாஸ், வதனி, நித்தியானந்தன், ஸ்ரீகாந்தன், ஞானச்சந்திரன், கீதாஞ்சலி, மஞ்சுளா ஆகியோரின் மாமியாரும், சஜிதா, மகிந்தா, டிலானி, சஞ்சீவ், துவாரகா, பீஷ்மன் , உஷானி, பிரியங்கா, விஷ்ணு, பரதன், மயூரன், வாணி, கார்த்திக், அபிராமி, காயத்திரி, அருண், சரண்யா, லக்ஸ்மன், வர்மன், அர்ஜுன், அபிமன், துஷாரா, அனோஜன், லக்ஷன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ருத்ராஸ், அத்தீனா, ஆதீஸ், ரிஷி, ஜனா, ஆரன், அமையா, கொலின், ஏரியில், அசாராவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மொன்றியலில் உள்ள, RIDEAU FUNERAL HOME ,4275 SOURCE BLED,DOLLARD des ormeaux ,H9B 2A6. என்னும் முகவரியிலுள்ள மலர்ச்சாலையில் சனிக்கிழமை இன்று (26.03.2022) பி.ப 2மணிமுதல் மாலை 5மணி வரையிலும், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7மணி முதல் காலை 9மணி வரையிலும் பார்வைக்கு வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை காலை 9-1 மணிவரை இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தொடர்புகளுக்கு:**
**பாஸ்கரன் : 001 (604) 328-9229 ,**
**பிரபா : 001 (604) 762-6183,**
**சுதா : 001 (604) 307-6984,**
**காந்தன் : 001 (514) 501-5997**

(CS 19015) (4/6)

**தகவல்:**
**துவாரகா ஆரூரான்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 02 - 1930



மறைவு 24 - 03 - 2022

## நாகமுத்து சண்முகசுந்தரம்

மாவிலங்கை அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சண்முகசுந்தரம் நேற்றுமுன்தினம் (24.03.2022) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்தியலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், தவமலரின் அன்புக் கணவரும், கேதீஸ்வரனின் (சுவிஸ்), பாசமிகு தந்தையும், விஜிதாவின் (சுவிஸ்) அன்பு மாமனாரும், டர்ணிகாவின் (சுவிஸ் - மருத்துவபீட மாணவி) பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, செல்லப்பா, வைத்தியலிங்கம், வேலுப்பிள்ளை, இளையதம்பி மற்றும் கனகம்மா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சண்முகசுந்தரம், இரத்தினம் மற்றும் சுப்பிரமணியம், பரராஜசேகரம், காலஞ்சென்ற இராசேஸ்வரி மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாவிலங்கை,**
**அளவெட்டி வடக்கு,**
**அளவெட்டி.**

(cs 43766) (2.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 447 8935**

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### நாங்கள்...

வுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போதே தமிழர் தாயகத்தில் இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் நிலச் சுவீகரிப்புத் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கூட்டமைப்பு கொண்டு சென்றது.

இந்தக் கூட்டம் முடிவடைந்த சில மணி நேரங்களிலேயே இராணுவத் தளபதி கூட்டமைப்பினரைத் தொடர்புகொண்டு மேற்படி தெரிவித்துள்ளார்.

இதற்கு, 'இராணுவத்தினர் சுவீகரித்த காணி பற்றிய விடயங்கள் எம்மிடம் உள்ளன. தேவையேற்படின் அவற்றை வெளிப்படுத்த முடியும்' என்று கூட்டமைப்பினர் இராணுவத் தளபதியிடம் தெரிவித்துள்ளனர். (ம)

### தொடர்ந்தும்...

உத்தியோகபூர்வ சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியிலிருந்து பிற்பகல் 1 மணி வரையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், மாவை.சோ.சேனாதிராசா, த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன், கலையரசன் ஆகியோர் கலந்து கொண்டனர். ரெலோ சார்பில் 3 நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்னரே அறிவித்ததைப்போன்று சந்திப்பைப் புறக்கணித்தனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் உரையாற்றிய ஜனாதிபதி கோத்தாபய, பல தடவைகள் சந்திப்பு இடம்பெற இருந்தும் பல்வேறு காரணங்களுக்காக அவை ஒத்திவைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்து பேசுவதற்குத் தயாராக இருப்பதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (அ-ஒ-5)

### கொக்குவிலில்...

கிழக்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியை இரு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் தீக்கிரையாக்கியுள்ளனர். அவர்கள் வீட்டின் கண்ணாடியையும் அடித்து நொருக்கியுள்ளனர். வீட்டிலுள்ள சி.சி.ரி.வி. கமராவில் பதிவான காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-20)

### பெற்றோல்...

கொழும்பு, மார்ச் 26

நேற்று நள்ளிரவு 12 மணி முதல் அனைத்து வகை பெற்றோல்களின் விலையை 49 ரூபாவால் அதிகரிக்க லங்கா ஐஓசி தீர்மானித்துள்ளது. இதன்படி பெற்றோலின் புதிய விலை 303 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் டீசல் விலையில் மாற்றம் இல்லை என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுதி குறைவடைந்ததே இந்த முடிவுக்கு காரணம் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம)

# மரண அறிவித்தல்

மலர்வு 24 - 02 - 1941



உதிர்வு 21 - 03 - 2022

## திருமதி கமலாம்பிகை கந்தசாமி

**(இளைப்பாறிய பிரதம மருந்தாளர், யாழ்.,கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை)**

சிவகாமி அம்மன் கோவில் வீதி காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, முல்லைத்தீவு தற்போது கனடாவை (Canada) வசிப்பிடமாகவும் கொண்ட கமலாம்பிகை கந்தசாமி கடந்த (21.03.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம்-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரமலை-சௌந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கதிரமலை கந்தசாமி (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர், நல்லூர்) அவர்களின் பாசமிகு மனைவியும், கமலவதனி (கனடா), காலஞ்சென்ற திவாகரன் ஆகியோரின் அன்பு தாயாரும், உதயகுமார் (கனடா), தர்மினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெனிபரின் அன்புப் பேர்த்தியும், சதாசிவம், மதியாபரணம், மகேஸ்வரி, விமலாதேவி, சதிலீலாவதி, கலாரூபவதி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் அஞ்சலி நிகழ்வு இன்று (26.03.2022) சனிக்கிழமை 5.00pm to 9.00 pm (கனடா நேரம்) Ajax crematorium visitation centre 384 finley avenue ajax ON L1s 2E3, Canada விலும், இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை 12.00pm to 4.00 pm (கனடா நேரம்) நடைபெறும். நிகழ்வுகளை LANKASRI RIP BOOK இல் பார்வையிடலாம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**[illegible] (மகள்-கனடா)**
**+16478780439**

**தகவல்:**
**ஜெ.விமலாதேவி (சகோதரி)- 076 604 5148**
**ஜெ.ஜங்கரன் (பெறாமகன்)- 076 015 4710**
சிவகாமி அம்மன் வீதி, காரைநகர்.

(CS 19013) 1/6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்
## தரம் - 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சை 2021 - (2022) பெறுபேறுகள்



01. சோ.சர்விகா - 168
02. சி.சுபஹரி - 164
03. ச.டினோசன் - 158

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04. ப.அபிராமி | - 147 | 12. வி.தக்ஷிகன் | - 132 | 20. அ.கிசோபன் | - 115 |
| 05. பு.பவரதன் | - 143 | 13. ஜீ.கோபிகன் | - 131 | 21. த.அஜந்தா | - 111 |
| 06. யூ.ராமாஜினி | - 143 | 14. வி.சருஷன் | - 129 | 22. சி.கணாளன் | - 106 |
| 07. வி.ரிஷபன் | - 142 | 15. செ.தருன் | - 128 | 23. ஜெ. கபின்ஷன் | - 93 |
| 08. ந.விதுசா | - 142 | 16. பு.பவிநயா | - 127 | 24. செ.அஸ்வினி | - 85 |
| 09. சு.டுபிகா | - 141 | 17. லி.தனுஷர | - 124 | 25.ஆ.ஆதவன் | - 84 |
| 10.கி.சஞ்ஜெய் | - 141 | 18. மோ.சாங்கவி | - 121 | 26. ர.பிரசாத் | - 80 |
| 11.மு.அக்ஷயா | - 138 | 19. த.மதுஷயன் | - 120 | 27. ஜெ.ஜெசான் | - 75 |

சித்தியெய்திய மாணவர்களை வாழ்த்துவதோடு கல்வி கற்பித்த **ஆசிரியை** திருமதி **மகாலிங்கம் கிருஷ்ணகுமாரி** மற்றும் நெறிப்படுத்திய அதிபர் திருமதி **சுந்தரபாரதி சிவமலர்** அவர்களையும் பாராட்டுகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய பழைய மாணவர் சங்கம்.**

(cs 43766) (2.6)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## செல்வன் வே.சஞ்சீவன்
## புள்ளி - 156



அண்மையில் வெளிவந்த 2021 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று யா/ புன்னாலைக் கட்டுவன் இந்து தமிழ் கலவன் பாடசாலையின் 65 வருடகால வரலாற்றில் முதற்தடவைாக பெருமை சேர்த்த இம் மாணவனையும் அவருடன் சிறந்த பெறுபேற்றை பெற்ற ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

- ம. சாருகான் - 145
- ஜெ. தர்சனா - 125
- யோ.கஸ்மி - 111

**70 புள்ளிகளுக்கு மேல்**

- ப.சரண்யன்
- ச.லோஜிதன்
- க.மதுமிதா

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன் புரிக்கழகம்
யா/ புன்னாலைக் கட்டுவன் இ.த.கலவன் பாடசாலை

(CS 43770)(2.6)

# வர்த்தக நிலையத்தினுள் இளைஞர் குழு அடாவடி!

வவுனியா, மார்ச் 26

வவுனியா வைரவப் புளியங்குளம் பகுதியில் உள்ள வர்த்தக நிலைய மொன்றில் இளைஞர் குழுவொன்று அடாவடியில் ஈடுபட்டதையடுத்துக் காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

குறித்த வர்த்தக நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் இளைஞர்கள் சிலர் ஒன்றாக அமர்ந்திருந்த சமயத்தில் அந்த இடத்துக்கு வருகைதந்த மற்றொரு இளைஞர் குழுவினர் அந்த இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-18)

## விற்பனைக்கு உண்டு

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களுடன் கூடிய கடைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

(CS 19014) (4/6) **077 214 6148**

## காசாளர் & கணக்காளர் (ஆண்/பெண்)

யாழ்ப்பாணத்தில் உள்ள மருந்தகம் ஒன்றுக்கு 20 -30 வயதுக்கு இடைப்பட்ட முழுநேர / பகுதி நேர கணக்காளர் & காசாளர் தேவை. (Accountant&Cashier)

**077 036 0555** (CS 19010) (2.6)

## காணி விற்பனை

சாவகச்சேரி லேடிஸ் College வீதியிலும் ஸ்டேசன் வீதியிலும் காணி விற்பனைக்குண்டு.

**076 389 5962**

## யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம்
### வருடாந்த பொதுச்சபை கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

- காலம் : 10.04.2022 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் : மாலை 4.00 மணி
- இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

அனைத்து சங்க உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(cs 19001) (2.6) நிர்வாக சபையினர்.

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு, இத்துறையில் அனுபவமுள்ள களஞ்சிய காப்பாளர் (Store Keeper) தேவை.

தொடர்பு: **077 944 8109, 076 7600 403**
**Email:jenoshanark@gmail.com**

## வேலை ஆள்கள் தேவை

எமது அரைக்கும் ஆலைக்கு வேலை ஆள்கள் தேவை மற்றும் பொருட்களை நிறுத்து Bill போடக்கூடிய ஆண் ஒருவர் தேவை. (பழக விரும்புபவரும் தொடர்பு கொள்ளவும்.)

(CS 43767) (3/6) **077 124 8265**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம் புதிய அனுமதிகள்
### கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணி - 2022/2023 (அணி 1)
### Master of Christian Studies

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து கிறிஸ்தவ சமயம் அல்லது இறையியல் சார்ந்த இளங்கலைமாணிப் பட்டம்

*அல்லது*

- சமய மற்றும் மெய்யியற் கற்கை அவையினால் பரிந்துரைக்கப்பட்டு உயர் பட்டப் படிப்புகள் பீட அவையின் ஊடாக பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக் கூடிய வேறு தகைமைகளும் அனுபவ அத்தாட்சிகளும் பரிசீலிக்கப்படும்.

| | |
|---|---|
| தெரிவுமுறைமை | : திறன்காண் பரீட்சையும், நேர்முகத் தேர்வும் |
| கற்கைக் காலம் | : ஒரு வருடம் |
| மொழி மூலம் | : தமிழ் / ஆங்கிலம் |
| கற்கைநெறிக் கட்டணம் | : 105,000/- (5000/- மீள அளிக்கப்படும்) |
| விண்ணப்பப் படிவக் கட்டணம் | : 1,000/- |
| விண்ணப்ப முடிவுத்திகதி | : 29.04.2022 |

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை**

1. மக்கள்வங்கியின் ஏதாவதொரு கிளையில் பணம் வைப்பிலிடும் வைப்புச்சீட்டில் (190012630002348) எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்திற்கான ரூபா 1000/- கட்டணத்தை செலுத்திய பின் வைப்புச்சீட்டை உயர்பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
2. தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பபடிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட 23 X 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப் பதிவாளர், உயர் பட்டப் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
3. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிகவிபரங்கள் www.grad.jfn.ac.lk எனும் பல்கலைக்கழக வலைத்தள (website) வசதியூடாகவும் பெற்றுக்கொள்ளலாம். வலைத்தளம் மூலமாக தர விறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/- பெறுமதியான காசுக்கட்டளையை மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு (190012630002348) செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தல்**

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணி எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 29.04.2022க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

25.03.2022 (IN 17070) (3/6) **பதிவாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்கு...

ஜனாதிபதி கோத்தாபயவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன்போதே மேற்படி நிபந்தனைகளை கூட்டமைப்பு விதித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

**அரசியல் கைதிகள்**

இந்தச் சந்திப்பின்போது, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் 48 பேர் 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறைகளில் வாடுகின்றனர். தீர்ப்பு வழங்கப்பட்டு தண்டனை அனுபவிக்கின்ற கைதிகளை மன்னிப்பிலும், வழக்கு நடைபெறும் கைதிகளை பிணையிலும் விடுவதற்கான யோசனை கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்டது. இதன்போது பதிலளித்த ஜனாதிபதி, 'நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இணைந்து ஒவ்வொரு கைதி தொடர்பிலும் ஆராய்ந்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அதற்கு அமைவாக துரித நடவடிக்கை எடுக்கப்படும்' எனவும் குறிப்பிட்டார்.

**காணாமல் ஆக்கப்பட்டோர்**

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்கப்படுவது இழப்பீடு அல்ல என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெளிவுபடுத்தினார். காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் பல துன்பங்களை எதிர்கொள்கின்றன. அதற்கு அவர்களுக்கு உதவித் தொகையாகவே இது வழங்கப்படுகின்றது என்று குறிப்பிட்டார். காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் கூட்டமைப்பு கேள்வி எழுப்பிய போது, கிளிநொச்சியில் தன்னைச் சந்தித்த 4 தாய்மார் தமது பிள்ளைகளை விடுதலைப் புலிகள் கடத்தியதாகக் குறிப்பிட்டனர் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி பதிலளித்துள்ளார்.

இதன்போது கூட்டமைப்பினர், இராணுவத்தினரிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டு, அவர்களால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று கூறினர். இது தொடர்பில் உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். அதற்கு அரச தரப்பில் இணக்கம் வெளியிடப்பட்டது.

**காணிகள் ஆக்கிரமிப்பு**

பாதுகாப்புத் தரப்பு, தொல்பொருள் திணைக்களம், வனவளத்திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம் என்பன வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணிகளை சுவீகரிக்கின்றன. இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடன் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மக்கள் காலாதிகாலமாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட காணிகளை வனவளத் திணைக்களத்தினர் கைப்பற்றுகின்றனர் என்று கூட்டமைப்பினர் முறையிட்டனர். தென்பகுதியில் தொல்பொருள் திணைக்களம் என்று அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள வயல்களில் மக்கள் விவசாயம் செய்கின்றனரே, உங்கள் பகுதிகளில் மாத்திரம் ஏன் தடை விதிக்கப்படுகின்றன என்று இதன்போது பிரதமர் மஹிந்த கேள்வி எழுப்பியுள்ளார். இத்தகைய காணி ஆக்கிரமிப்பு, சுவீகரிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கூட்டமைப்பினர் முன்வைத்த கோரிக்கையை ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் ஏற்றுக் கொண்டனர்.

**முதலீட்டு நிதியம்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புலம்பெயர் முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கான தடைகள் நீக்கப்பட்டு அவர்கள் சுதந்திரமாக முதலிடுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்தனர். வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்திக்காக தனியான அபிவிருத்தி நிதியம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். இதற்கும் அரச தரப்பினர் சாதகமாக பதிலை வழங்கினர். இந்தக் கோரிக்கைளை குறுகிய காலத்தில் நிறைவேற்றி அரசு நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதன் மூலம், இந்தப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டினர். (அ-ஒ-5)

## 1 டொலர்...

யாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. பல முன்னணி வர்த்தக வங்கிகளின் புதுப்பிக்கப்பட்ட தரவுகளின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 290 தொடக்கம் 297 ரூபாவாக இருந்தது.

மத்திய வங்கியால் நேற்று வெளியிடப்பட்ட நாணய மாற்று வீதத்தின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 279.90 ரூபாவாகவும் விற்பனை விலை 289.99 ரூபாவாகவும் பதிவாகியது. (அ-ம)

## மின்வெட்டு...

இருந்து அறியமுடிகின்றது.

எரிபொருள் பற்றாக்குறையால் இலங்கையில் பல மின் உற்பத்தி நிலையங்களின் செயற்பாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கடுமையான எரிபொருள் பற்றாக்குறை காரணமாக கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதர மின்னுற்பத்தி நிலையங்களும் கடும் நெருக்கடியைச் சந்தித்துள்ளன. இதையடுத்தே மின்வெட்டு ஒரு நாளைக்கு ஆறரை மணி நேரத்திலிருந்து 10 மணி நேரமாக நீடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-ம)

## மின்வெட்டு நேரம்...

தால் அடுத்த வாரம் மின்வெட்டு நேரத்தில் அதிகரிப்பு ஏற்படாது என்று பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மின்னுற்பத்திக்குத் தேவையான எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, தற்போது நடைமுறையில் இருக்கும் ஆறரை மணி நேர மின்வெட்டு அடுத்த மாதம் தொடக்கம் 10 மணிநேரமாக அதிகரிக்கும் என்று நேற்றுத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையிலேயே மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருள் விநியோகத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்குவதற்கு உறுதியளித்துள்ளதால் அடுத்த வாரம் மின்வெட்டு நேரத்தில் அதிகரிப்பு ஏற்படாது என்று பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ-ம)

## குழந்தையை...

தது என்று நேற்று செய்தி வெளியாகியிருந்த நிலையில், அந்தக் காரை தந்தையார் செலுத்தவில்லை மாறாக பிறிதொருவரே அந்தக் காரைச் செலுத்தினார் என்று குழந்தையின் உறவினர்கள் தெரிவித்தனர்.

குறித்த காரைச் செலுத்தியவர் பொருள்களை இறக்கிவிட்டு குழந்தையைப் பாதுகாப்பாக நகர்த்திவிட்டு காரை இயக்கினார் எனவும் திடீரென குழந்தை எதிர்பாராத விதமாக சில்லுக்குள் சிக்குண்டது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-ம)

## 'காணியைச்...

அபகரிக்கின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நேற்றுச் சுட்டிக்காட்டப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரால் காணி சுவீகரிக்கப்படுகின்றது என்று கூட்டமைப்பினர் தெரிவித்தபோது, ஜனாதிபதி கோத்தாபயவும், பிரதமர் மஹிந்தவும் இராணுவத்தினருக்கு காணிகளை சுவீகரிக்கவேண்டாம் என்று பணித்துள்ளோமே என்று குறிப்பிட்டுள்ளனர். இல்லை இராணுவத் தேவைக்காக மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன என்று கூட்டமைப்பினர் கூறியபோது, ஆச்சரியத்துடன் செவிமடுத்தார் ஜனாதிபதி கோத்தாபய. அதன் போது குறுக்கிட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ச எப்போது நடந்தது? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்கு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அண்மையில் நடைபெற்றது. மாதகலில் நடந்தது, வடமராட்சி கிழக்கில் நடந்தது என்று குறிப்பிட்டனர். காணி சுவீகரிப்புக்கு எதிரான மக்கள் போராட்டத்திலும் தாங்கள் கலந்து கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். அவற்றை நிறுத்தவேண்டும் என்ற கூட்டமைப்பின் கோரிக்கையையும் ஜனாதிபதியும், பிரதமரும் ஏற்றுக் கொண்டனர். (அ-ம-ஒ-5)

## புத்தூர்...

சபையின் மாதாந்த அமர்வு நேற்று இடம்பெற்றது. அமர்வு நடைபெற்றுக் கொண்டிருந்த போது தவிசாளர் தியாகராஜா நிரோஷ்க்கு பொதுமக்கள் அலைபேசியில் அழைப்பெடுத்து, நிலாவரைக் கிணறு அமைந்துள்ள வளாகத்தில் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் கட்டுமானங்களில் ஈடுபட எத்தனிக்கின்றனர் என்று முறையிட்டுள்ளனர். இதையடுத்து தவிசாளர் சபையை இடைநடுவே முடிவுறுத்திவிட்டு சபை உறுப்பினர்களுடன் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளார். இதன்போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பலர் அங்கு அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இராணுவத்தினரும் அவர்களுடன் நின்றிருந்தனர். சபையினர் வருவதைக்கண்ட இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். இதையடுத்து சபையினர், 'தமது ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் அனுமதி பெறாமல் என்ன செய்கின்றீர்கள்?' என்று வினவியுள்ளனர். எனினும் அகழ்வில் ஈடுபட்டவர்களிடம் இருந்து தெளிவான பதில் கிடைக்கவில்லை. பொலிஸாரும் அவ்விடத்துக்கு வந்தபோது தவிசாளர் நடந்தவை அனைத்தையும் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், தமிழ் தேசிய முன்னணியின் சட்ட ஆலோசகர் சுகாஸ் ஆகியோரும் குறித்த இடத்துக்குச் சென்று அகழ்வில் ஈடுபட்டவர்களுடன் முரண்பட்டதையடுத்து, அவர்கள் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர். (அ-ம-இ)

## யாழ். கலாசார...

வைக்கப்படவுள்ளதாக இந்தியத் தூதரகத்தால் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு எத்தனை மணிக்கு இடம்பெறும், விருந்தினர்கள் யார் என்பது தொடர்பில் எதுவித தகவலையும், இந்தியத் தூதரகம் மாநகர சபைக்குத் தெரியப்படுத்தவில்லை.

இதேவேளை, இந்தியப் பிரதமர் மோடி இந்தியாவிலிருந்தும், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்பிலிருந்தும், இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அலரி மாளிகையில் இருந்தும் தொழில்நுட்ப ரீதியாக இந்த நிலையத்தைத் திறந்து வைப்பார்கள் என்று அறியமுடிகின்றது.

2016ஆம் ஆண்டு அடிக்கல் நடுகை செய்யப்பட்டு கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2020ஆம் ஆண்டு நிறைவடைந்திருந்தன. இந்தக் கலாசார நிலையத்தை யார் பராமரிப்பது என்பது தொடர்பில் இழுபறி நிலைமை காணப்பட்டது. அதற்கு இன்னமும் தீர்வு எட்டப்படாத நிலையிலேயே திறப்பு விழா தொடர்பில் தூதரகம் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு நிகழ்வு ஏற்பாட்டுக்கு அறிவுறுத்தியுள்ளது. (அ-ஒ-5)

## 13 இல்லையேல்...

மாகத் தெரிவித்தார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

ஜனாதிபதி கோத்தாபயவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே கூட்டமைப்பின் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர், அதில் எத்தகைய விடயங்களைச் சேர்ப்பது அல்லது நீக்குவது என்பது தொடர்பில் கலந்துரையாடலாம் என கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

இதன் பின்னர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணப் பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக்குதல் என்ற பெயரில் கொழும்பு அரசின் கீழ் உள்வாங்குவதனால் எதிர்காலத்தில் மாகாண கல்வி அமைச்சே தேவையில்லை என்ற நிலை உருவாகும் என்று சுட்டிக்காட்டினர். அத்துடன் மாகாண மருத்துவமனைகளை மாவட்ட மருத்துவமனைகளாக மாற்றும் செயற்பாடும் இவ்வாறான ஒன்றுதான் எனக் குறிப்பிட்டனர்.

13ஆவது திருத்தத்தை அதன் ஆரம்ப நிலையில் முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் கூட்டமைப்பினர் தெரிவித்தனர். இதன்போது நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர், 13ஆம் திருத்தம் கொண்டு வரப்பட்ட காலத்திலிருந்தே அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. எந்தவொரு அரசாங்கத்தாலும் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது. அதில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைச் செயற்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன என்று கருத்துத் தெரிவித்தனர்.

இந்தக் கருத்துக்களால் கோபமடைந்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மேசையில் பலமாக அடித்து, நாங்கள் நாய்கள் அல்ல. 13ஆவது திருத்தத்தைக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை என்றால், நாங்கள் எங்கள் வழியைப் பார்த்துக் கொள்கின்றோம் என்று குறிப்பிட்டார். சம்பந்தன் இவ்வாறு குறிப்பிட்டதும், ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பிரதமர் மஹிந்த இருவரும் திகைப்புடன் அவரைப் பார்த்தனர்.

உடனே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தவே முடியாது என்று கூறவில்லை. அதிலுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து நடைமுறைப்படுத்த முயற்சிப்போம் என்று குறிப்பிட்டு நிலைமையைச் சமாளித்தார். (அ-ம-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் ஊழலை அம்பலப்படுத்திய ஊடகருக்கு கொலை அச்சுறுத்தல்

## கண்டிக்கிறது சுதந்திர ஊடக இயக்கம்

**கொழும்பு, மார்ச் 26**

**மூத்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலரின் ஊழல்களை அம்பலப்படுத்தி கட்டுரையொன்றை எழுதிய 'சதிஅக அருண' மற்றும் 'தினபதா அருண' பத்திரிகைகளின் ஆசிரியர் சமிந்த சேனாரத்னவுக்கு கொலைமிரட்டல் விடுத்தமை புறக்கணிக்க முடியாத மிகப் பாரதூரமான விடயம் எனச் சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.**

இது தொடர்பில் அந்த இயக்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், கடந்த 15ஆம் திகதி அருண பத்திரிகையில் 'திடீரெனப் பணக்கார்களாக மாறும் பொலிஸார்' என்ற தலைப்பில் கட்டுரை பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் தனக்குக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக ஊடகவியலாளர் சமிந்த சேனாரத்ன சுதந்திர ஊடக இயக்கம் இது தொடர்பில் வினவியபோது பதிலளித்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதுடன், முறைப்பாட்டுக்கு மேலதிகமாகத் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி பொலிஸ்மா அதிபருக்கு எழுத்து மூலமான கடிதத்தையும் அனுப்பியதாக ஊடகவியலாளர் சமிந்த சேனாரத்ன தெரிவித்தார். ஊடகவியலாளர் சமிந்த சேனாரத்னவுக்கு 0712293495 என்ற உள்ளூர் தொலைபேசி இலக்கம் மற்றும் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட 00916282807305 வட்ஸ் அப் இலக்கங்களில் இருந்து அச்சுறுத்தல் அழைப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக சுதந்திர ஊடக இயக்கம் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலும் குறித்த கட்டுரையில் உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தொடர்பில் மேற்கொண்ட வெளிப்படுத்தல் காரணமாக ஊடகவியலாளர் சமிந்தவை மூன்று வாரங்களுக்குள் கொன்று விடுவோம் என மறைமுகமாக மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

> “இலங்கை பொலிஸ் போன்ற அரச நிறுவனங்கள் கண்டிக்கப்பட வேண்டிய அளவு சீரழிந்திருப்பது வருந்தத்தக்கது என்று ஊடக அறிக்கையின் மூலம் சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.”

இலங்கைப் பொலிஸாருக்கு இந்தச் சம்பவம் தொடர்பில் உண்மையான அக்கறை காணப்படின், தொலைபேசித் தரவுச் சோதனையின் மூலம் ஊடகவியலாளர் சமிந்த சேனாரத்னவை அச்சுறுத்திய தரப்பினரை அடையாளம் காணமுடியும். பொலிஸாரின் நேர்மை மற்றும் பொறுப்புணர்வை சோதிக்க இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும் எனச் சுதந்திர ஊடக இயக்கம் தெரிவிக்கின்றது. ஆகவே இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய ஆதாரங்களுடன் விசாரணைகளைத் துரிதப்படுத்தி ஊடகவியலாளர் சமிந்த சேனாரத்னவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்குக் கோரிக்கை விடுத்துள்ள சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை பொலிஸ் போன்ற அரச நிறுவனங்கள் கண்டிக்கப்பட வேண்டிய அளவு சீரழிந்திருப்பது வருந்தத்தக்கது என்றும் ஊடக அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளது.

(ஒ-இ)

## ஞானக்குழந்தை இல்லங்களின் வருடாந்த விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 26
பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஞானக்குழந்தை இல்லங்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.
பரியோவான் கல்லூரி ஆசிரியர் கலாநிதி.பா.காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கரம்பொன் சண்முகநாதர் வித்தியாலய முன்னாள் அதிபர் க.தேவராஜா கலந்துகொள்வார். (ஒ-14)

## இந்து இளைஞர் மன்ற பாலர் கலைவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 26
உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் கலைவிழா நாளை முற்பகல் 10 மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
மன்றத்தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாம வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சங்கரப்பிள்ளை கிருபானந்தன் கலந்துகொள்வார். (ஒ-14)

காணி விற்பனைக்கு
தெல்லிப்பழையில் 32 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தெல்லிப்பழை-கட்டுவன் காப்பெற் வீதியிலிருந்து 100M தூரம். தெல்லிப்பழை வைத்திய சாலை. புகையிரத நிலையம் 1 km பலாலி விமான நிலையம் 2 1/2 km பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு:077 540 4741

வீடு வாடகைக்கு
நல்லூர் சூழலில் நாவலர் வீதியில் நிறுவனமொன்று வாடகைக்கு இருந்த வீடு. ஏப்ரல் மாதம் தொடக்கம் மீண்டும் வாடகைக்கு கொடுக்கப்படவுள்ளது.
விவரம்: 4 பரப்பை உள்ளடக்கிய காணியில் வாகனத்தரிப்புடன் கூடிய சகல வசதிகளையும் உள்ளடக்கிய புதிய வீடு 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை மட்டும் பின்வரும் தொலைபேசி நம்பருடன் தொடர்புகொள்ளவும்
077 381 7853
cs 43769) (2.6)

உடனடி வேலைவாய்ப்பு
பச்சிலைப்பள்ளி (பளை) மற்றும் துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் தேங்காய் எண்ணெய் ஆலைக்கு வேலை ஆட்கள் தேவைப்படுகின்றனர்.
ஆர்வமுள்ளவர்கள் கீழ் காணும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.தொலைபேசி இலக்கம் -
077 899 8853 குறித்த பிரதேசங்களில் வசிப்பவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
cs 43769) (2.6)



# மகளிர் தினமும் கௌரவிப்பும்

"நிலைபேறான அபிவிருத்திக்கு பால்நிலை சமத்துவம் பேணுவோம்" என்ற கருப்பொருளில் வவுனியா பிரதேச செயலகத்தின் மகளிர் தினமும் பெண் முயற்சியாளர்கள் கௌரவிப்பும் வவுனியா மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெண் முயற்சியாளர்களுக்கான நேர்முகத் தேர்வின் போது தெரிவு செய்யப்பட்ட மூவருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. விளையாட்டு நிகழ்வுகளில் சாதனை படைத்த வீராங்கனைகளும்யும் கௌரவிக்கப்பட்டனர். பிரதேச செயலர் நா.கமலதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஐயம்பிள்ளை புவனநாயகி, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பத்மாவதி ஜெயச்சந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14-110)

# வீதி விளக்குகளை ஒளிரவிடவேண்டாம் உத்தரவு முறையாக நடைமுறையாகவில்லை

மின்சாரத்தைச் சேமிக்க வீதி விளக்குகளை நிறுத்துவது தொடர்பாக மின்வலு அமைச்சால், அனுப்பப்பட்ட சுற்றறிக்கை, யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளால் செயற்படுத்தப்படவில்லை.
இந்தச் சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்த சபைகளின் உறுப்பினர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளதால், சபைகள் பின்னடித்துள்ளன.
சில பிரதான வீதிகளில் வீதி விளக்குகள் அணைக்கப்பட்டு, உள் வீதிகளில் ஒளிரவிடப்பட்டுள்ளன. சில பிரதான வீதிகளில் வீதி விளக்குகளை ஒளிரவிட்டு, உள் வீதிகளில் அணைக்கப்படுகின்றன.
நாட்டு நிலைமைக்கேற்ப முன்னுதாரணமாக திகழ வேண்டிய உள்ளூராட்சி சபைகள், மத்திய அமைச்சின் சுற்றறிக்கையை உதாசீனம் செய்துள்ளமை விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஒ-4-9)


வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.
வரவேற்பாளர்
தகைமை: க.பொ.த. உயர்தரம்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
தகைமை: க.பொ.த. உயர்தரம்
ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன்
28/03/2022 திங்கட்கிழமை மு.ப 09.00 மணிமுதல் ந.ப 12 மணிவரை நேரில் சமுகம்தரவும்.
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org